SAMARASAM
சமரசம்
மாதம் இருமுறை இதழ்
1-15 நவம்பர் 2026 ₹25
Volume : 47 Issue : 10
www.samarasam.net

ஜனநாயகத்தை
இடித்துத் தள்ளும்
புல்டோசர்கள்

உமர் காலிதுக்கு
சர்வதேச
அங்கீகாரம்

பற்றி எரியும் போராட்டம்
தீர்வு கிடைக்குமா?

நவி பிள்ளையின்
நோபல் பரிசும்
காஸாவின்
இனப்படுகொலையும்..!

TRADITIONAL TRUST SINCE 1925

LKS

100 YEARS

(மறுமையில்) மக்கள் அவர்களின் எண்ணங்களின் அடிப்படையிலேயே எழுப்பப்படுவார்கள்.

– முஹம்மத் நபி(ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு

L.K.S.

கோல்டு பேரடைஸ்

35. கதீட்ரல் ரோடு, சென்னை - 600 086.
போன் : (044) 2811 3611

உள்ளே...

பற்றி எரியும் போராட்டம் தீர்வைத் தருமா? 10

- கப்ளிசேட்

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி

ஜனநாயகத்தை இடித்துத் தள்ளும் புல்டோசர்கள் | **தலையங்கம்** | 8

தொழில்நுட்பத் தற்சார்பா? அரசியல் எதிர்ப்பின் மீதான ஐயமா? | **புதுமடம் ஜாபர் அலீ** | 15

நவி பிள்ளையின் நோபல் பரிசும் காஸாவின் இனப்படுகொலையும்..! | **டாக்டர் சலீம்கான்** | 16

உங்களுக்கு மரணம் எப்போது வரும்? | **அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது** | 22

திருக்குர்ஆன் மனிதகுல வழிகாட்டி | **மு.முஹம்மது இம்ரான்** | 24

நேர்மையான கதையாடலை உருவாக்க வேண்டும் | **சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி** | 30

இறுதி மொகலாய மன்னர் பகதூர் ஷா! | **சேயன் இப்ராகிம்** | 34

செல்லப் பிராணிகள் வளர்ப்பு : ஒரு பார்வை | **Dr. நியாஸ் முஹம்மது ரஃபீ B.V.Sc., AH** | 37

பேச்சு | **மௌலானா முஹம்மத் ஃபாரூக் கான்** | 40

அக்கரைப் பச்சை | **ஜரீனா ஜமால்** | 44

உமர் காலிதுக்கு சர்வதேச அங்கீகாரம் | 50

ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

படைப்புகளை அனுப்ப :
samarasam.article@gmail.com

சந்தா - விநியோகப் பிரிவு விளம்பரத் தொடர்புக்கு :
M. அப்துல் காதர் 95661 53142

விளம்பரங்களை அனுப்ப :
samarasam.advt@gmail.com

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

சந்தா விவரம்

ஓர் ஆண்டு	:	ரூ.550
அரையாண்டு	:	ரூ.280
வெளிநாடு (ஓர் ஆண்டு)	:	ரூ.3500

Creative Communication Chennai
SCAN & PAY

சமரசம் சந்தாக்கள்,
விளம்பரக் கட்டணங்களை அனுப்ப
QR Codeஐ Scan செய்யவும்

பொறுப்பாசிரியர், சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

● உலகம் அமைதிபெற வேண்டும்

பாலியல் குற்றவாளிகள் தப்பிவிடக் கூடாது என்ற தலையங்கம் சிறப்பு. ஏமன் போர் குறித்த விரிவான தகவல்கள் பல உண்மைகளை வெளிக்காட்டியது. எந்த நாட்டுப் போரும் ஏற்புடையதல்ல. அமைதிக்காக அனைவரும் குரல் கொடுக்க வேண்டும். சிரித்து வாழ வேண்டும் கட்டுரை அருமை. கப்பிசேட் வெளிநாட்டு முதலீடுகள் குறித்து விரிவாக எழுதியுள்ளார். ஃபலஸ்தீனுக்கு ஆதரவாக யூதர்களின் குரல் வித்தியாசமான பார்வை.

– ப.குருசாமி, தேனி

● தகவல் களஞ்சியம்

அக்டோபர் மாத சமரசம் இதழ் முத்துக்கள் நிறைந்தது. தலையங்கம் முதல் இறுதிப் பக்கம் வரை ஒரு தகவல் களஞ்சியம்(Encyclopedia) என்றால் மிகையாகாது. குறிப்பாக LEAD 100 திட்டம் தூரநோக்குப் பார்வை. இது இன்ஷா அல்லாஹ் ஒரு Dream Project. Vision 2026 மூலம் நடைபெறும் இந்தத் திட்டம் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

– முஹம்மது ஆரிப், ஒசூர்

● பேறு பெற்றவர்

சிறுமிகளைச் சீரழிக்கும் கொடூரம் தலையங்கம் பல நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டியது. தனி மனித ஒழுக்கம் மட்டுமே இதற்குத் தீர்வாக இருக்க முடியும். இழுக்கப்படும் வேட்பாளர்களால் திணிக்கப்படும் இடைத்தேர்தல் அவசியமாகிறது. இடைத்தேர்தல் மட்டுமின்றி இந்த ஆறு மாத அரசின் அவலங்களை மிகச் சிறப்பாக நேர்த்தியான முறையில் பத்திரிகைச் செய்தியாக கொடுத்த விதம் நன்று. மின்வெட்டு பால் தட்டுப்பாடு மற்றுமின்றி அரிசி முதற்கொண்டு அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி மக்களின் வாழ்வை அவலநிலைக்குக் கொண்டு சென்றுள்ளது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

வெளிநாட்டு முதலீடுகளாகட்டும் புதிய தொழில் தொடங்குவதற்கான ஏற்பாடுகளாகட்டும் எதுவாக இருந்தாலும் உண்மைத் தன்மை வேண்டும். இஸ்லாத்தை தீவிரமாக எதிர்ப்பவர்கள் நாளடைவில் இஸ்லாத்தின் உண்மைத் தன்மை அவர்களைப் புனிதனாக மாற்றிவிடும் என்பதற்குச் சான்று நெதர்லாந்து நாட்டின் யோரான் வான் கிளாவரெனின் இஸ்லாமிய வருகை. நேர்வழி பெற்ற பேறு பெற்றவர்.

– சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

● ஆட்சியாளர்களின் கண்களைத் திறக்குமா?

புன்னகை ஒரு பொன்னகை. அதை அணிந்தவர் வாழ்நாளெல்லாம் எந்த நிலையிலும் மகிழ்வோடு வாழ்வது நிதர்சனம். ஃபலஸ்தீனுக்கு ஆதரவான யூதர்களின் குரல்கள் குறித்த கடைசிப்பக்கம் ஆட்சியாளர்களின் கண்களைத் திறக்கும் என ஆதரவு வைக்கிறேன். LEAD 100 அருமையான ஆக்கப்பூர்வமான திட்டம்.

இஸ்லாத்தைத் தழுவிய கிறித்தவரான யோரான் வான் கிளாவரென் உலக மக்களை நோக்கி அழைப்புப் பணி செய்ததுடன் ஆலோசனைகளையும் வழங்கிய முறை அற்புதமாக இருந்தது. அவர் நமது வாழ்த்துக்குரியவர்.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பொருளாதார லாப அடிப்படையிலேயே பிறநாட்டு உள்விவகாரங்களில் தலையிடுவது அப்பட்டமாகத் தெரிகிறது. மனிதாபிமானமும் இல்லை! வெண்டைக்காயும் இல்லை!

பள்ளிகளில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வரும் காலை உணவுத் திட்டத்திற்கு முன்னோடியாக துவரங்குறிச்சி ஜமாஅத்தே இஸ்லாமி மகளிர் அணியினர் திகழ்வது அறிந்து மகிழ்ந்தேன்.

– S.A. சபீர் அஹ்மத், ஆணைக்காரன்சத்திரம்

• இறுதி முடிவு இனிதாய் அமைய..!

ஒரு சிறிய நாடான ஏமனில் உள்ளுக்குள் இவ்வளவு அரசியல் வலைப் பின்னல்களா? படிக்கப் படிக்க தலை சுற்றியது. ஏமன் நாட்டு மக்களை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும். நமது இறுதி முடிவு குறித்து கவலையுடன், பயத்துடன் பிரார்த்தித்துக் கொண்டே இருக்க வேண்டும். 'நல்ல முடிவு இறையச்சம் (தக்வா) உடையவர்களுக்கு மட்டுமே கிடைக்கும்' என்று திருக்குர்ஆன் எடுத்துரைக்கின்றது.

ஜியோனிச தீவிரவாதிகளைத் தவிர பெரும்பான்மையான யூத பிரபலங்கள் ஃபலஸ்தீனர்களின் முழு உரிமைகளையும் அங்கீகரிப்பவர்களாக உள்ளதை வலதுசாரி அமெரிக்க - இஸ்ரேல் ஆட்சியாளர்கள் உணர மறுப்பது அநீதியாகும். பிரார்த்தனை குறித்த கவிதை அருமை. சிந்தித்து உணரத் தூண்டின.

– ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம்

• தூக்கிலிட வேண்டும்

84 வயதான வீரமணி சிறுமிகளைச் சீரழித்திருப்பது வேதனையளிக்கிறது. என்ன மாதிரியான நாட்டில் நாம் வாழ்கிறோம்? தண்டனைகள் கடுமையாக்கப்பட வேண்டும். இதற்குத் தூக்குத் தண்டனையே சரியானது. ஏமன் போரை டாக்டர் முஹையுத்தீன் மிக விரிவாக புரியும்படி விளக்கியுள்ளார். கெட்ட போரிடும் உலகினை வேரோடு எப்போது சாய்க்கப் போகிறோம்? கோயிலை இடித்து பாபர் பள்ளிவாசல் கட்டினார் என்பது வரலாற்றுப் பொய் என்பதை சேயன் இப்ராகிம் ஆதாரத்துடன் விளக்கியுள்ளார். மம்முனி மௌலவியின் வாழ்வு வாழும் மனிதர்களுக்குப் பாடம்.

– இரா. சண்முகவேல், கீழக்கலங்கல்

• ஆளுமைகள் உருவாக வேண்டும்

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கேரளத் தலைவர்களில் ஒருவரான மம்முனி மௌலவியின் மரணத்தையொட்டி அவரது அரும்பணிகளைப் படித்து வியந்தோம். அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக! இவர் போல பல ஆளுமைகள் உருவாக வேண்டும். காமராஜர், எம்.ஜி.ஆர். கருணாநிதி, ஜெயலலிதா, ஸ்டாலின் எனத் தொடர்ந்த சத்துணவுத் திட்டம் மேலும் விரிவடைந்திருப்பது மகிழ்வான செய்தி. கட்சித் தாவல் தடைச் சட்டம் மிகவும் அவசியம். மொகலாயப் பேரரசு குறித்த வரலாற்றுச் செய்திகள் மிகவும் தேவையான கட்டுரை.

– S. அஜித்தா, M. லைலாம்மா,
S. மகுதனன், தேனி

• சமரசமில்லா தலையங்கம்

சிறுமிகளைச் சீரழிக்கும் கொடூரம் தலையங்கம் மனதை பாரமாக்கியது. இக் கொடூரத்திற்கு 50 கோடி இலஞ்சம் வாங்கி உடந்தையாக இருப்பது எவ்வளவு அவலம். நம் கண்மணிகளான சிறுமிகளைக் காப்பாற்ற வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் கூடுதல் கவனத்டன் இருக்க வேண்டும். சமரசமில்லா சமரசத்தின் தலையங்கம் அருமை.

– கவிஞர் காசீம், கடையநல்லூர்

• தலைகுனியும் தமிழகம்

சிறுமிகளைச் சீரழித்த வீரமணியின் செயலால் தமிழ்நாடு தலைகுனிந்து நிற்கிறது. சிரிப்பு கட்டுரை சிறப்பு. வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பார்கள். புன்னகை புரிவோம். அரசியல் சுயநலத்திற்காகத் திணிக்கப்பட்டிருக்கிறது இடைத் தேர்தல். இறுதி முடிவு இனிதாக அமைய வேண்டும் வாழ்க்கைப் பாடம் அருமை.

– எம்.எஸ்.பாரூக், திருப்பாலத்துறை

• நகைச்சுவைப் பகுதிக்கு இடம் இல்லையா?

சிரித்து வாழ வேண்டும் மிகச் சிறப்பான கட்டுரை. சிரித்தால் பைத்தியம் என்று சொல்லி விடுவார்களோ என்று பலர் சிரிப்பதே இல்லை. இறுக்கமான முகத்துடன்தான் பலர் இருக்கிறார்கள். சமரசத்தில் நகைச்சுவைப் பகுதிக்கு இடம் தரவில்லை. ஆனாலும் சிரிப்பு கட்டுரைக்கு இடம் தந்துள்ளீர்கள்! வாழ்த்துகள்

– T.M. பெரோஸ்கான், தேனி

ஆலிம்கள் விரும்பிப் படிக்கும் சமரசம்

– சேயன் இப்ராகிம்

2025ஆம் ஆண்டு மே மாதம் ஒரு நாள் புதுச்சேரியில் மர்கஸ் அல் இஸ்லாஹ் என்ற ஆலிம் பயிற்சி மையத்தை நிறுவி நடத்தி வருகின்ற ஹழரத் மௌலானா சையது நிஜாமி ஷாஹ் நூரி பாகவி அவர்கள் என்னைத் அலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு சமரசம் மே 1-15 இதழில் நான் எழுதியிருந்த 'தினமணியின் அவதூறு' என்ற கட்டுரை மிகச் சிறப்பாக உள்ளதாகப் பாராட்டினார். நான் மிகவும் நெகிழ்ந்து போனேன். தினமணி 5-4-25 இதழில் தியாகராஜன் என்பவர் முஸ்லிம்கள் குறித்து எழுதியிருந்த அவதூறு களுக்குப் பதில் அளிக்கும் விதத்திலேயே நான் அந்தக் கட்டுரையை எழுதியிருந்தேன். அதனைத் தான் ஹழரத் அவர்கள் படித்து விட்டு எனக்குப் பாராட்டுத் தெரிவித்தார். அவர் சமரசம் இதழின் தொடர் வாசகர் என்பதையும் என்னிடம் அப்போது தெரிவித்தார்.

2026 அக்டோபர் 10,11 ஆகிய தேதிகளில் அவர் நடத்தி வருகின்ற மர்கஸின் 13ஆவது பட்டமளிப்பு விழாவில் ஹழரத் அவர்களின் அழைப்பின் பேரில் நான் கலந்து கொண் டேன். இது ஒரு வித்தியாசமான மர்கஸ். அரபி மதரஸாக்களில் 7 ஆண்டுகள் அல்லது 5 ஆண்டுகள் பயின்று பட்டம் பெற்ற ஆலிம்களுக்கு இந்த மர்கஸில் திறன் மேம் பாட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கணினி உள்ளிட்ட பல்வேறு துறைகள் பற்றிய அடிப்படையான விஷயங்கள் இங்கே ஆலிம்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் ஓராண்டாகும். ஒரு கல் லூரிக்கு நிகரான உள் கட்டமைப்பு வசதிகள் இந்த மர்கஸில் இருக்கின்றன. பல் துறை சார்ந்த விற்பன்னர்கள் அழைக்கப்பட்டு மாணவர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கப் படுகிறது.

இந்த மர்கஸின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக ஆயிரக்கணக்கான ஆலிம்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளி லிருந்து வந்துள்ளனர். அவர்களில் மிகப் பெரும்பாலோர் சமரசம் வாசகர்களாக இருக் கின்றனர் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். 'சேயன் இப்ராகிம்' என்ற எனது பெயரைக் கேட்டதும், 'ஓ..! நீங்கள் தான் சமரசத்தில் எழுதுகிறீர்களா? நான் உங்கள் கட்டுரைகளைத் தொடர்ந்து படித்து வருகிறேன்' எனப் பல ஆலிம் பெருமக்கள் என்னிடம் தெரிவித்த போது எனது மகிழ்ச்சி இரட்டிப்பானது. எனது முகமும், முகவரியும் வெளியுலகிற்குத் தெரியக் காரணமாக இருக் கின்ற சமரசம் இதழ் ஆலிம்கள் அதிகம் வாசிக்கின்ற இதழாகவும் இருக்கிறது.

எனது பயணத்தின் போது நான் மயிலாடு துறைக்கு அருகே இருக்கின்ற கிளியனூர் என்ற ஊருக்குச் சென்று அங்கு 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயல்பட்டு வருகின்ற ரஹ்மானியா அரபிக் கல்லூரியைப் பார்வையிட்டேன். கல்லூரி முதல்வர் மௌலானா ஜமாலுதீன் ஆலிம் அவர்களையும் சந்தித்து உரையாடி னேன். அப்போது என்னுடன் வந்திருந்தவர் 'இவர் தான் சேயன் இப்ராகிம், பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுகிறார்' என்று ஹழரத் அவரிடம் கூறியபோது, அதற்குஅவர், 'நீங்கள்தான் சேயன் இப்ராகிமா? நான் சமரசத் தில் உங்களது கட்டுரைகளைப் படிக்கிறேன். உங்கள் கட்டுரைகளைப் பாராட்டி அடிக்கடி வாசகர் கடிதப் பகுதிக்கு கடிதங்கள் எழுதி வருகிறேன். உங்களை நேரில் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி' என்று கூறினார்.

இதற்கு முன்னர் பல இலக்கிய விழாக் களில், கல்லூரி ஆண்டு விழாக்களில் நான் கலந்து கொண்ட போது பல இலக்கிய அன்பர்கள், எழுத்தாளர்கள், பேராசிரியர்கள் சமரசத்தில் எழுதுகின்ற சேயன் இப்ராகிம் நீங்கள் தானே என்று விசாரித்திருக்கின்றனர். சமரசம் இதழ் ஆலிம்களாலும், இலக்கிய அன்பர்களாலும், கல்வியாளர்களாலும், இதர மத அன்பர்களாலும் அதிகம் விரும்பிப் படிக் கின்ற இதழாக இருக்கிறது. இது சமரசத்திற்கு கிடைத்த வெற்றியே!

அல்லாஹ்வின்
விருந்தாளிகளின்
சேவையில்
31வது
வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

இன்ஷா அல்லாஹ்

2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

TRUST WORTHY

அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

தொடர்பு கொள்வீர்
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

சரம் : 47
மலர் : 10

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

1448 ஜமாதில் அவ்வல் 20 - ஜமாதில் ஆகிர் 5 ● 2026 நவம்பர் 1-15

ஜனநாயகத்தை இடித்துத் தள்ளும் புல்டோசர்கள்

அசாம் மாநிலத்தின் நாகோன், ஹோஜாய், கோலாகாட் மாவட்டங்களின் வனப்பகுதியிலுள்ள 547 குடும்பங்கள் 2026 அக்டோபர் 17 அன்று வெளியேற்றப்பட்டன. தொடர்ந்து அக்டோபர் 18 அன்று லுதுமாரியில் 600 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன. இரண்டு நாள்களில் 1,100க்கும் மேற்பட்ட குடும்பங்களும், பத்துக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களும் பாஜக அரசால் புல்டோசரால் இடித்துத் தள்ளப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் வங்காள மொழி பேசும் முஸ்லிம்கள்.

முறையற்ற ஆவணங்கள், சட்டவிரோதக் குடியேறிகள் என்று அரசு காரணம் கூறினாலும், தங்களுடைய முன்னோர்களை வனத்துறையினரே தொழிலாளர்களாக அங்கு குடியமர்த்தியதாகப் பல குடும்பங்கள் கூறுகின்றன. சில குடும்பங்களுக்கு 1974ஆம் ஆண்டிலேயே அந்த நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. அசாமில் கடந்த பத்தாண்டு கால பாஜக ஆட்சியில் இது போன்று சுமார் 19,000 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன. அவர்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள்.

2026 அக்டோபர் 11ஆம் நாள் மத்தியப் பிரதேசத்தின் சிஹோர் மாவட்டத்தின் கோஸ்மி கிராமத்தில், ‘வன நிலத்தை ஆக்கிரமித்துவிட்டார்கள்’ என்ற குற்றச்சாட்டின் பேரில் 12 பாரேலா பழங்குடியினக் குடும்பங்களின் வீடுகள் புல்டோசர்களைக் கொண்டு இடித்துத் தகர்க்கப்பட்டன. பயிர்கள் அழிக்கப்பட்டன. குடிநீர் எடுப்பதற்குப் பயன்படுத்திய கிணறுகள் மண்ணைக் கொட்டி மூடப்பட்டன.

பழங்குடியின மக்கள் தாங்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் வன நிலங்களின் மீதான உரிமையைப் பெறுவதற்கு வழிவகுக்கும் 2006ஆம் ஆண்டின் வன உரிமைச் சட்டத்தின் கீழ் நில உரிமைக்காக விண்ணப்பித்த குடும்பங்களும் வெளியேற்றப்பட்டவர்களில் அடங்குவர். 2025 டிசம்பரில் பதிவு செய்யப்பட்ட அவர்களுடைய விண்ணப்பங்கள் மீது முடிவு எடுக்கப்படுவதற்கு முன்பே அவர்களுடைய வீடுகளின் மீது புல்டோசர்கள் ஏறி இறங்கிவிட்டன.

வீட்டுவசதி, நில உரிமைகள் தொடர்பியல்(HLRN) அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் 1.5 இலட்சம் வீடுகள் புல்டோசர்களால் இடிக்கப்பட்டதாகவும், 7 இலட்சம் பேர் வீடற்றவர்களாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றது. 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் தில்லி குடிசைப்பகுதிகளில் சட்டவிரோதக் குடியேற்றங்களை அகற்ற பாஜக பரப்புரை மேற்கொண்டது. அதேபோல் உத்தரப்பிரதேசத்தில் ‘ஆபரேஷன் கிளீனிங் டிரைவ்’ பரப்புரையை மேற்கொண்டது.

2024 மே 17ஆம் தேதி உத்தரப்பிரதேசம் பாரபங்கியில் நடைபெற்ற பேரணியில் பிரதமர் மோடி பேசும் போது ‘புல்டோசர்களை எப்படி, எங்கு பயன்படுத்த வேண்டும் என்பதை ஆதித்யநாத்திடமிருந்து பாடம் பெற வேண்டும்’ என அறிவுறுத்தினார்.

இப்போது பிரதமர் மோடி தன் இல்லம் அமைந்துள்ள ரேஸ் கோர்ஸ் பகுதியில் 100 ஆண்டுகள் பழமையான பள்ளிவாசலின் மீது புல்டோசரை ஏவத் திட்டமிட்டுள்ளார். புதுதில்லி மாநகராட்சி இணையதளத்தில் பாரம் பரியச் சொத்துகளின் பட்டியலில்(Heritage Property)இடம் பெற்று வந்த இந்தப் பள்ளியின் பெயர் அண்மையில் நீக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பள்ளிவாசல் அரசு நிலத்தில் இருப்பதாகக் கூறி 7.10.2026 அன்று மின்சாரம், தண்ணீர் இணைப்புகளைத் துண்டித்ததுடன் இந்தப் பள்ளிவாசலை இடிக்க தில்லி நிலம், மேம்பாட்டு அலுவலகம் உத்தரவிட்டுள்ளது. 6 நாள்களுக்குள் இடத்தைக் காலி செய்ய அக்டோபர் 19ஆம் நாள் நோட்டீஸ் வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து இப்பகுதியில் பல வீடுகளும் இடிக்கப்பட்டுள்ளன.

1977 தில்லி அரசிதழில் பாரம்பரிய நினைவுச்சின்ன பட்டியலில் இந்தப் பள்ளிவாசல் இடம்பெற்றுள்ளது. சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச் சகத்தில் பராமரிக்கப்படும் திருத்தப் பட்டியலிலும் இந்தப் பள்ளி இடம் பெற்றுள்ளது. 2021ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் ரேஸ் கோர்ஸ் பள்ளிவாசல் அனுமதியற்றது என்றோ அல்லது அத்துமீறப்பட்ட இடத்தில் உள்ளது என்றோ அடையாளம் காணப்படவில்லை.

ஒரு வீடு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டால் முறையாக விசாரணை, மாநக ராட்சி நோட்டீஸ் கொடுப்பது, உரிய விளக்கம் அளிக்க அவகாசம் அளிப்பது என்ற எந்த நெறிமுறையும் புல்டோசர்களுக்கு முன்னால் பலனளிப்பதில்லை.

1947 ஆகஸ்ட் 15 அன்று நாட்டில் எங்கெல்லாம் வழிபாட்டுத் தலங்கள் யாருடைய கைகளில் உள்ளதோ அவர்களுடைய உரிமையின் கீழ் அவை தொடரும். எவ்விதத் தகராறுகளுக்கும் ஆக்கிரமிப்புகளுக்கும் அனுமதி இல்லை’ என்று 1991 ஏப்ரலில் வழிபாட்டுத் தலங்கள் சிறப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்திலிருந்து சர்ச்சைக் குரிய பாபரி மஸ்ஜித் மட்டுமே விதி விலக்காக இருக்கும் என்று பாபரி மஸ்ஜித் தீர்ப்பிலும் குறிப்பிட்டிருந்தது. ஆனால் ஒன்றிய பாஜக அரசு சட்டத்தையும், அரசியல் அமைப்பின் மாண்புகளையும் ஒரு பொருட்டா கவே கருதுவதில்லை.

பாஜக அரசில் சிறுபான்மையினருக்கான உரிமைகள் தொடர்ந்து பறிக்கப் பட்டு வருகின்றன. வாழ்வதற்கான இருப்பிட உரிமை, வழிபாட்டு உரிமைகள் இடித்து நொறுக்கப்படுகின்றன. தேர்தல் தில்லுமுல்லுகளினால் வாக்குரிமை திருடப்படுகின்றது. பன்மைச் சமூகத்தில் சிறுபான்மையினருக்கான இடமும், இருப்பும் அச்சுறுத்தலுக்கு உள்ளாவது ஜனநாயகத்தைச் சிதைக்கும் கொடுஞ் செயல் ஆகும்.

வாக்குரிமையைப் பறித்ததற்காகத் தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கக் கோரி போராட்டங்கள் வீரியமடைந்துள்ள சூழலில் வாழ்வுரிமை பறிக்கப்படுவதைக் கண்டித்தும் குரல்கள் எழ வேண்டும். மக்கள் விரோத பாஜக ஆட்சி தூக்கி எறியப்பட வேண்டும். மக்கள் தன் பார்வையை விசாலப் படுத்தி இப்போராட்டத்தை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும்.

● கப்ளிசேட்

பற்றி எரியும் போராட்டம் தீர்வைத் தருமா?

தி இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழின் புலனாய்வு அறிக்கை இந்திய தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளிலுள்ள முக்கிய முரண்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தலைமையிலான தேர்தல் ஆணையத்தில் மற்ற இரு தேர்தல் ஆணையர்களான சுக்பீர்சிங் சந்து, விவேக் ஜோஷி ஆகிய இருவரும் கடந்த 10 மாதங்களில் குறைந்தது 14 முறை தங்களது எழுத்துப் பூர்வமான ஆட்சேபனைகளையும், முரண்பாடு களையும், அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்துள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

முக்கியமான பல முடிவுகள், நிர்வாக உத்தரவுகள் தங்களுக்குத் தெரியாமலோ, அல்லது தங்களது ஒப்புதல் பெறாமலோ, தலைமைத் தேர்தல் ஆணையரின் தன்னிச் சையான வழிகாட்டுதலின் கீழ் எடுக்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளனர். புதிய வாக்காளர்களைச் சேர்ப்பதற்கான சட்டப்பூர்வமான படிவம் 6 (Form 6) இல், தேர்தல் ஆணையத்தின் IT பிரிவு தன்னிச்சையாக மாற்றங்களைச் செய்ததாக அவர்கள் குறிப்பிட் டுள்ளனர். உரிய சட்டத் திருத்தங்கள் இன்றி இந்தப் படிவ மாற்றங்களை மேற்கொண்டது சட்டவிரோதமானது, அங்கீகாரமற்றது என்று தேர்தல் ஆணையர் விவேக் ஜோஷி எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்துள்ளார்.

தேர்தல் ஆணையத்தின் தகவல் நுட்பப் பிரிவு(IT Division) மூலம் வாக்காளர் தரவுத் தளத்தை(Voters Data Base), புதுதில்லியிலுள்ள ECI Net, ERO Net மூலமாக மையப் படுத்தப்பட்டன. இதனால் அந்தந்த பகுதிகளின் கள அதிகாரிகளான வாக்காளர் பதிவு அதிகாரிகளின் (Electoral Registration Officers - ERO) சட்டப்பூர்வமான அதிகாரங்கள் பறிக்கப்படுவதாகவும், முறைகேடுகளுக்கு வழிவகுப்பதாகவும் இரு தேர்தல் ஆணை யர்களும் எச்சரித்துள்ளனர்.

தேர்தல் ஆணைய தகவல் நுட்பப் பிரிவின் மீதான கண்காணிப்பைக் குறைக்கும் வகை யில் பிறப்பிக்கப்பட்ட உள்நிர்வாக உத்தரவை எதிர்த்து இரு தேர்தல் ஆணையர்களும் கேபினட் செயலாளருக்குக் கடிதம் எழுதி முறையிட்டுள்ளனர். இது தேர்தல் வரலாற்றில் மிகவும் அரிதான முன்னெப்போதும் இல்லாத நிகழ்வாகக் கூறப்படுகிறது.

இந்த அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து விளக்கமளித்த இந்திய தேர்தல் ஆணையம், ஒருமித்த கருத்துகளின் அடிப்படையிலேயே அனைத்து இறுதி முடிவுகளும் எடுக்கப்பட்டன என்றும், உள் விவாதங்களின் போது மாறுபட்ட கருத்துகள் எழுவது ஒரு துடிப்பான ஜனநாயக அமைப்பில் இயல்பானதுதான் என்றும் கூறியுள்ளது. இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் பெரும் புயலைக் கிளப்பியது. எதிர்கட்சிகள், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்று போராட்டங்கள் நடத்தின. இந்த விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக்கோரி புதுதில்லி, மும்பையில் போராட்டங்கள் வெடிப்பதற்கு ஒரு நாள் முன்பாக, தேர்தல் முறைகேடு குறித்து மற்றொரு குற்றச்சாட்டு பீகாரில் எழுந்துள்ளது. 2024 இல் ஒடிசா, ஆந்திரப் பிர தேசம், இந்த ஆண்டுத் தொடக்கத்தில் மேற்கு வங்கம் என்று தொடர்ந்து அதிகரித்து வரும்

தேர்தல் முறைகேடு குற்றச்சாட்டுகளுடன் இதுவும் இணைகிறது. பீகாரில் SIRஇல் 68.66 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டு இருக் கிறார்கள். மேற்கு வங்காளத்தில் 16 இலட்சம் வாக்காளர்கள் எந்தக் காரணமும் இன்றி ரகசியமாக நீக்கப்பட்டுள்ளனர். ஏன் எதற்கு என்ற காரணங்கள் இரண்டு தேர்தல் ஆணை யருக்கும் தெரிவிக்கப்படவில்லை.

வாக்காளர் பட்டியலில் இருந்து கோடிக் கணக்கான வாக்காளர் பெயர்கள் முறை கேடாக நீக்கப்பட்ட விவகாரத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும். நாட்டில் நிலவும் 42% பட்ட தாரிகள் வேலையின்மை குறித்து ஒன்றிய அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண் டும். நீட்(NEET), போட்டித்தேர்வு முறைகளில் உள்ள குளறுபடிகளைக் களைய வேண்டும். தேர்வு ரத்து, வினாத்தாள் கசிவு விவகாரத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தலா 10,000 இழப்பீடு வழங்க வேண்டும். கணினி வழித் தேர்வுகளுக்கு 72 மணிநேர அவசர மறுதேர்வு வாய்ப்பும், சுயாதீன தொழில்நுட்ப தணிக்கையும் வேண்டும். பெருநிறுவனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடக உரிமைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

தணிக்கையற்ற செய்தியாளர் சந்திப்பு களை நடத்தவேண்டும். இளைஞர்களை கரப்பான் பூச்சிகள் என்று குறிப்பிட்டதற்காக விளக்கம் அல்லது மன்னிப்புக் கோரப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் பெண் களுக்கு 50% இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும். கட்சித் தாவலில் ஈடுபடும் MLA, MPக்கள் 20 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட தடைவிதிக்க வேண்டும். ஓய்வுபெற்ற நீதிபதி களுக்கு ராஜ்யசபை MP பதவி வழங்குவதைத் தடை செய்யவேண்டும். 2025 ஜனவரியில் உள்ள பழைய வாக்காளர் பட்டியலையே பயன்படுத்த வேண்டும் என்பன போன்ற மிகத் துணிச்சலான கோரிக்கைகளை முன் வைத்து கரப்பான்பூச்சி ஜனதா பார்ட்டி(CJP) போராடி வருகின்றது.

தில்லியில் தொடங்கியுள்ள தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிரான போராட்டத் தைத் தடுக்க ஒன்றிய அரசு பல்வேறு முயற்சி களை எடுத்தது. டெல்லிக்கு வரும் பல ரயில் களை ரத்து செய்தது. போராட்டக்காரர்கள் ஒன்று கூடுவதைத் தடுக்க ஏறக்குறைய 57 மெட்ரோ நிலையங்களை மூடியது. இந்தப் போராட்டத்தை ஏராளமான விவசாய அமைப்புகள், மாணவர் அமைப்புகள், இளைஞர் அமைப்புகள், பெண்கள் அமைப்புகள், எதிர் கட்சிகள், ஊடகவியலாளர்கள் எனப் பல தரப் பினரும் ஆதரித்தார்கள்.

போராட்டத்தைத் தடுக்க 15,000க்கும் மேற்பட்ட காவல்துறை, மத்திய பாதுகாப்புப் படையினர் என 38,000 வீரர்கள் தில்லியில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். பல்வேறு பகுதிகளில் இருந்து தில்லிக்கு வரும் 13 விரைவு ரயில்கள் ரத்து செய் யப்பட்டன. வெளி மாநிலங்களில் இருந்து தில்லிக்கு வரும் பேருந்துகள், தில்லி, புற

நகர்ப் பகுதிகளில் விடுதிகள், ஓட்டல்களில் தங்கியிருப்பவர்கள் தீவிரமாகக் கண்காணிக் கப்பட்டனர். இணையதள சேவைகள் முடக்கப்பட்டன. முன்வரிசையில் ஈடுபடும் போலீஸாரின் உடைகளில் கேமரா பொருத் தப்பட்டன. போராட்டத்தில் பங்கு பெறும் CJP தொண்டர்களைக் காவலில் வைக்க திருமண மண்டபங்கள், மைதானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டன.

ஜந்தர் மந்தரில் போராட்டங்கள் நடத்த பத்து நாள்களுக்கு முன்பே அனுமதி பெற

வேண்டும். மிகக் குறுகிய காலத்தில் CJP மனு அளித்துள்ளதால் ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்த அனுமதி வழங்கப்படவில்லை என தில்லி காவல்துறை இணை ஆணையர் நுபுர் பிரசாத் தெரிவித்தார். ஆனால் போராட்டத்திற்கு அனுமதி வழங்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தலைமை நீதிபதி சூர்யகாந்த் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அனைத்து வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், அமைதியான வழியில் போராட்டம் நடத்த அனைவருக்கும் உரிமை உள்ளது. ஆனால் அனுமதியின்றி போராட்டம் நடத்துவது சட்ட விரோதமாகும். மெட்ரோ ரயில் போக்குவரத்து முடக்கம், மற்ற போக்குவரத்து வசதிகளையும் முடக்கி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் சரியான போக்குவரத்து வசதிகள் முறைப்படுத்த வேண்டும். இந்த விவகாரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரத்தை நீதிமன்றத்தில் அறிக்கையாகத் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

இதனையும் மீறி CJP சார்பில் நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் முதல்வர்கள் மம்தா பானர்ஜி, அரவிந்த் கெஜ்ரிவால், பினராயி விஜயன், மாணிக் சர்க்கார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். CJP நிறுவனர் அபிஜித் தீப்கே, செய்தித் தொடர்பாளர் சவ்ரவ் தாஸ், ஒருங்கிணைப்பாளர் அசுதோஷ் ரங்கா ஆகியோர் மும்பையில் இருந்து விமானத்தில் தில்லி சென்றபோது தில்லி விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியபோது காலை 11 மணி அளவில் பெண் போலீஸ் அதிகாரிகள்

விமானத்தில் நுழைந்து அங்கேயே மூவரையும் கைது செய்தனர். ஓராண்டு வரை அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது என்ற நிபந்தனையுடன் மூவரும் தலா 50,000 பிணைத்தொகை செலுத்திய பிறகு நிபந்தனை ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

ஓராண்டு வரை அமைதிக்குக் குந்தகம் விளைவிக்க மாட்டோம் என்று எழுத்துப் பூர்வமாக உத்தரவாதம் அளித்த பிறகு மூவரும் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும், அபிஜித் தீப்கே இதனை மறுத்துள்ளார். அபிஜித் தீப்கேவின் பாட்டி மஹாராஷ்டிரா ஹிங்கோலி மாவட்டம் சந்துக்பிம்பரி கிராமத்தில் இறந்த தகவல் கிடைத்தும், ஜாமீன் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் அவரால் இறுதிச் சடங்கில் பங்கேற்க முடியவில்லை. போராட்டம் இரண்டாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றதால் ஜந்தர் மந்தர் பகுதியில் போராட்டக்காரர்களை நுழைய விடாமல் தடுக்க 6 அடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டது. இதைத் தொடர்ந்து கன்னாட் பிளேஸ், ஜஎன்ஏ மார்க்கெட், மண்டி ஹவுஸ், படேல் சவுக், டால்ஸ்டாய் சாலை உள்ளிட்ட பகுதிகளில் CJP போராட்டக்காரர்கள் குவிந்து போராடினார்கள்.

தில்லி பத்திரிகையாளர் மன்ற வளாகத்தில் இரண்டு செய்தியாளர்களை வலுக்கட்டாயமாகக் காவல்துறையினர் வேனில் அழைத்துச் சென்றனர். அப்போது ஏற்பட்ட மோதல்களில் செய்தியாளர்களுக்கு ரத்தக் காயங்கள் ஏற்பட்டன. நீதிமன்ற உத்தரவை மீறி தில்லியில் மெட்ரோ ரயில் நிலையங்கள் ஏன் மூடப்பட்டன? அதிகாரிகள் மீது ஏன் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று ஒன்றிய அரசு விளக்கமளிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதற்கிடையில் ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் உத்தரவால் தில்லி காவல் துறை ஜந்தர் மந்தரை போராட்டங்கள் நடத்தும் அதிகாரப்பூர்வ அட்டவணையிலிருந்து நீக்கியது. அதற்கு மாற்றாக போராட்டங்கள் நடத்த ராம்லீலா மைதானம், புராரி மைதானம், கிழக்கு

தில்லியில் உள்ள சி.பி.டி மைதானம் ஆகிய மூன்று மாற்று இடங்களை அறி வித்தது.

இதில் தடையை மீறி ஜந்தர் மந்தர் பகுதியில் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட முயன்ற அசுதோஷ் ரங்கா, சவுரவ் தாஸ், அஜிங்கியா ஷிண்டே உள்ளிட்ட CJP கட்சி நிர்வாகிகளைக் காவல்துறை கைது செய்தது. அவர்களை தில்லி காவல்துறை தில்லி சிறப்பு நிர்வாக நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது. அவர்களை ஐந்து நாள்கள் நீதிமன்றக் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. அதேநேரத்தில் அஜிங்கியா ஷிண்டேவை மட்டும் ரூபாய் ஐந்தாயிரம் பிணைத் தொகையுடன் அடுத்த ஓராண்டுக்கு அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் போராட்டங்களில் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனையுடன் விடுவித்தது.

இதற்கிடையில் அக்டோபர் 12ஆம் தேதி இண்டியா கூட்டணி சார்பில் இந்தியா கேட் தொடங்கி உச்ச நீதிமன்றம் வரை பேரணி நடத்தப்பட உள்ளதாகவும் இதில் பங்கேற்க இளைஞர் காங்கிரஸ் அழைப்பு விடுத்தது. SIR தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக்கோரி இதற்கு முன்பே இண்டியா கூட்டணி சார்பில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்று வந்தன. கடந்த அக்டோபர் 6ஆம் தேதி நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து தலைமைத் தேர்தல் ஆணையம் வரை பேரணி நடைபெற்றது. 7ஆம் தேதி தில்லி ஜந்தர் மந்தர் அருகே காங்கிரஸ் தலைவர்கள் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோர் தர்ணாவில் ஈடுபட்டனர். 8ஆம்தேதி இண்டியா கூட்டணித் தலைவர்கள் காந்தி நினைவிடத்தில் பிரார்த்தனை போராட்டம் நடத்தினார்கள்.

9ஆம் தேதி இண்டியா கூட்டணி மூத்த தலைவர்கள் ஒன்றிணைந்து குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவைச் சந்தித்து தலைமைத் தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி மனு அளித்தனர். 12ஆம் தேதி இந்தியா கேட் முதல் உச்ச நீதிமன்றம் வரை பேரணி செல்வோம். வாக்குத் திருட்டைத் தடுக்க வேண்டும். SIR பணிக்குத் தடை விதிக்க வேண்டும். ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியிடம் கோரிக்கை மனு அளிக்க உள்ளோம். இதில் கட்சி, சாதி, பாலினம், சமுதாயம், மாநிலம் என்ற பாகுபாடு இல்லாமல் மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று ராகுல் காந்தி அழைப்பு விடுத்தார். அரசியல் கட்சித் தலைவர்களை தலைமை நீதிபதி சந்திக்க மறுத்ததால் இந்தச் சந்திப்பு நடைபெறவில்லை.

இந்தியாவில் தேர்தல் ஆணையர்களை பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் தேர்ந்தெடுக்கும் நடைமுறை இருந்தது. நாடாளுமன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க அரசு தன்னிச்சையாக ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. அதில் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர், பிற தேர்தல் ஆணையர்கள் சட்டம் 2023இன் படி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமரால் பரிந்துரைக்கப்படும் ஒன்றிய அமைச்சர் என்ற மூவர் குழு தலைமைத் தேர்தல் ஆணையர், பிற தேர்தல் ஆணையர்களை நியமிக்க குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்வார்கள். அதன்படி குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார்.

இதே சட்டம் பிரிவு 16 தேர்தல் ஆணையர்களுக்கு வாழ்நாள் சட்டப் பாதுகாப்பை வழங்குகிறது. தலைமைத் தேர்தல் ஆணையர், பிற தேர்தல் ஆணையர்கள் தங்கள் அதிகாரப் பூர்வ பணிகளைச் செய்யும் போது அல்லது அவர்கள் பேசிய வார்த்தைகளுக்காக அவர்கள் பதவியில் இருக்கும்போதும், பதவிக் காலம் முடிந்த பிறகும் அவர்கள் மீது சிவில், குற்றவியல் வழக்குகள் தொடர எந்த நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இல்லை என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இதனைப் பயன்படுத்தி தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரால் SIR முறைகேடுகள் மிக வெளிப்படையாகச் செய்யப்பட்டு எதிர்க் கட்சிகளைத் தோற்கடித்து பா.ஜ.கவிற்குச் சாதகமாக வெற்றி திருடப்பட்டது என்று அனைத்து எதிர்க்கட்சிகளும், CJP கட்சியும் குற்றம் சாட்டி இதற்குக் காரணமான தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்றே தில்லியில் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

சென்னை எழும்பூரில் இண்டியா கூட்டணி சார்பில் நடைபெற்ற SIR எதிர்ப்பு கூட்டுப் போராட்டத்தின் போது விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன், ‘தமிழ்நாட்டில் ஸ்டாலின், மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி, கேரளாவில் பினராயி விஜயன், தில்லியில் அரவிந்த் கெஜ்ரிவால் ஆகிய முன்னாள் முதலமைச்சர்களை SIR முறைகேட்டின் மூலம் தங்கள் கொள்கை எதிரிகளான இவர்களை பாஜக திட்டமிட்டு தோற்கடித்தது’ எனக் குற்றம் சாட்டினார். CJP கட்சியின் நிறுவனர் அபிஜித் தீப்கேவும் இதே கருத்தை இன்னும் வலிமையாகப் பதிவு செய்துள்ளார். முன்னாள் முதல்வர்களின் தொகுதிகளில் SIR நடவடிக்கை மூலம் நீக்கப்பட்ட வாக்காளர்களைவிட குறைவான வாக்குகளிலேயே இவர்கள் தோல்வி அடைந்தார்கள் என்று பதிவு செய்து இருக்கிறார்.

தில்லியில் தொடங்கிய போராட்டம் மும்பை, பாட்னா, பெங்களூரு, சென்னை என நாட்டின் பல பகுதிகளிலும் பரவத் தொடங்கி இருக்கிறது. இந்தப் போராட்டத்திற்கு ஸ்டாலின் ஆதரவு தெரிவித்துள்ளார். ‘எத்தனை போராட்டக்காரர்களை இந்த அரசால் தடுத்து வைக்க முடியும், எத்தனை இளைஞர்களின் குரல்களை அடக்க முடியும்? கருத்து மாறுபாடு என்பது குற்றம் அல்ல’ என்று மு.க. ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட CJP நிர்வாகிகளுக்குத் தேவையான அனைத்து சட்டப்பூர்வ உதவிகளையும் வழங்க திமுக தயாராக இருப்பதாகவும் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்கு (SIR) எதிரான இயக்கத்தை வலுப்படுத்தவும் விரிவுபடுத்தவும் சிவில் சமூக அமைப்புகள், மக்கள் இயக்கங்கள், பொது அறிவு ஜீவிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம் அக்டோபர் 14 அன்று புதுதில்லியில் உள்ள ஹர்கிஷன் சிங் சுர்ஜித் பவனில் நடைபெற்றது. அக்டோபர் 23 அன்று நாடு தழுவிய போராட்டம் நடத்தவும், வாக்காளர் பட்டியல்களைத் தணிக்கை செய்யவும், தேர்தல் சீர்திருத்தங்களை வலியுறுத்தவும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. காங்கிரஸ் கட்சி வரும் நவம்பர் 1ஆம் தேதி தில்லி ராம்லீலா மைதானத்தில் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி மிகப்பெரிய போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. தில்லி காவல்துறையும் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

தேர்தல் ஆணையம் SIR பிரச்னையைத் திசைதிருப்பும் வகையில் தமிழ்நாடு உட்பட 17 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் SSR (Special Summary Revision) சிறப்புத் திருத்தச் சுருக்கம் என்ற நடைமுறையை அதிரடியாக அறிவித்துள்ளது. இது SIR நடவடிக்கையில் விடுபட்டவர்கள், புதிய வாக்காளர்களை இணைப்பதற்குப் பயன்படும் ஒரு நடைமுறையாகும். ஆண்டுதோறும் இது போன்ற திருத்தங்களை மட்டும் செய்ய இந்த நடைமுறை பயன்படுத்தப்படுகிறது. நாள்தோறும் போராட்டங்கள் பல முனைகளில் வலுவடைந்து வரும் நிலையில் இந்திய தேர்தல் ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதே வாக்காளர்களின் மனநிலையாக இருக்கிறது.

தொழில்நுட்பத் தற்சார்பா? அரசியல் எதிர்ப்பின் மீதான ஐயமா?

– புதுமடம் ஜாபர் அலீ

Zoho நிறுவனத்தின் நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு இந்தியாவைச் சீர்குலைக்க முயலும் சக்திகளுக்கு எதிராகத் தேசபக்தர்கள் ஒன்றுபட வேண்டும் என்றும், தொழில்நுட்பம் நமக்கு எதிரான போராயுதமாகப் பயன்படுத்தப்படுவதாகவும் கூறியுள்ள கருத்துகள் பல கேள்விகளை எழுப்புகின்றன.

தேசியப் பாதுகாப்பும் அரசியல் எதிர்ப்பும்

வெளிநாட்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆதிக்கத்தைக் குறைத்து இந்தியாவின் ஆராய்ச்சி, பொறியியல் திறன்களை வளர்ப்பது அவசியம். ஆனால் தொழில்நுட்ப ஆதிக்கம் குறித்த கவலையையும் அரசியல் போராட்டங்களையும் ஒன்றாகக் கருத முடியாது. தொழில்நுட்பம் ஒரு நாட்டுக்கு எதிராகப் பயன் படுத்தப்படலாம் என்பதற்கும், அரசை விமர்சிப்பவர்கள் வெளிநாட்டுச் சதியின் கருவிகளாகச் செயல்படுகிறார்கள் என்பதற்கும் இடையே அடிப்படையான வேறுபாடு இருக்கிறது.

போராட்டக்காரர்கள் தேசவிரோதிகளா?

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கம் கோருவதும், வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்த நடவடிக்கையில் முறைகேடுகள் நடந்ததாகக் குற்றம்சாட்டுவதும், அதற்காகப் போராடுவதும் ஜனநாயகத்தின் பகுதிகளாகும். இந்தக் குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மை உரிய விசாரணைகள் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும். அதேபோல் போராட்டங்களுக்குப் பின்னால் வெளிநாட்டுத் தலையீடு இருப்பதாகக் கூறப்பட்டால் அதற்கும் உறுதியான ஆதாரங்கள் தேவை.

அரசை எதிர்ப்பவர்கள் அனைவரையும் தேசவிரோதிகளாகக் கருதுவது ஜனநாயகத்தின் அடிப்படையையே கேள்விக்குள்ளாக்கும். அரசின் கொள்கைகளை ஆதரிப்பவர்களுக்கு உள்ள கருத்துச் சுதந்திரம் அவற்றை எதிர்ப்பவர்களுக்கும் உண்டு. கருத்து வேறுபாட்டை வெளிப்படுத்துவது தேசவிரோதச் செயலல்ல; அது குடிமக்களின் உரிமை.

அரசுக்கு எதிரான போராட்டங்கள் வெளிநாட்டுச் சதியுடன் தொடர்புபடுத்தப்படும் சூழலில், ஸ்ரீதர் வேம்புவின் கருத்துகள் பாஜகவின் அரசியல் குரலுடன் ஒத்துப் போகின்றனவா என்ற கேள்வி எழுகிறது. இது அவரது நோக்கத்தை ஊகிப்பதல்ல; அவரது கருத்துகளின் அரசியல் விளைவுகளை ஆராய்வதாகும். தேசியப் பாதுகாப்பு குறித்த அவரது கருத்துகளும் ஆதாரங்கள், ஜனநாயக மதிப்பீடுகளின் அடிப்படையில் விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

இந்தியாவைச் சீர்குலைக்க முயலும் சக்திகளை எதிர்ப்பது அவசியம் என்றால், அரசின் செயல்பாடுகளைக் கேள்வி கேட்கும் குடிமக்களையும் போராட்டக்காரர்களையும் அதே ஐயத்தின் அடிப்படையில் அணுகலாமா? தேசபக்தி என்பது அரசின் ஒவ்வொரு செயலையும் ஆதரிப்பதா, அல்லது தவறுகள் நிகழும்போது அவற்றைக் கேள்வி கேட்பதுமா?

வெளிநாட்டுத் தலையீடு குறித்த குற்றச்சாட்டுகள் ஆதாரங்களுடன் விசாரிக்கப்பட வேண்டும். அதேநேரத்தில் தேசியப் பாதுகாப்பு என்ற பெயரில் அரசியல் எதிர்ப்பைக் குற்றப்படுத்தக் கூடாது. தொழில்நுட்பத்தில் தற்சார்பு அடைய விரும்பும் இந்தியா கருத்துச் சுதந்திரத்திலும் ஜனநாயகப் பொறுப்பிலும் தற்சார்புடன் இருக்க வேண்டாமா?

ஒரு நாட்டின் வலிமை அதன் தொழில்நுட்ப வளர்ச்சியில் மட்டுமல்ல; ஆட்சியைக் கேள்வி கேட்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் வெளிப்படுகிறது. ஜனநாயகத்தில் நாட்டின் மீதான அக்கறை என்பது அரசைக் கேள்வி கேட்பதைத் தவிர்ப்பதில் இல்லை; அந்தக் கேள்விகளுக்கான உரிமையைப் பாதுகாப்பதில்தான் இருக்கிறது.

நவி பிள்ளையின் நோபல் பரிசும் காஸாவின் இனப்படுகொலையும்..!

● டாக்டர் **சலீம்கான்**

தமிழில் : மௌலவி **சமியுல்லாஹ்** உமரி

1901ஆம் ஆண்டு நோபல் பரிசு தொடங்கப்பட்டது. இந்த ஆண்டு இப்பரிசு தனது 125ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. கடந்த 125 ஆண்டுகளில் 112 தனிநபர்களுக்கும் 28 அமைப்புகளுக்கும் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. 2026ஆம் ஆண்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த விருது தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த இந்திய வம்சாவளி சட்ட நிபுணரான நவநீதம் நவி பிள்ளைக்குக் கிடைத்துள்ளது.

இந்த நீண்ட கால வரலாற்றில் இந்தியர்களுக்கு இரண்டு முறை மட்டுமே இந்தப் பெருமை கிடைத்துள்ளது. 2014ஆம் ஆண்டு நரேந்திர மோடி பிரதமரான அதே ஆண்டில் கைலாஷ் சத்யார்த்திக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா யூசுஃபுடன் இணைந்து அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அப்போது மோடி வெளியிட்ட அறிக்கையில், ‘ஓஸ்லோவில் நடைபெறும் இந்த விழாவை ஒட்டுமொத்த நாடும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் பார்த்துக் கொண்டிருக்கிறது. கைலாஷ் சத்யார்த்தி தனது வாழ்க்கையை ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் மிகவும் முக்கியமான ஓர் இலட்சியத்திற்காக அர்ப்பணித்துள்ளார். அவரது அயராத முயற்சிகளுக்கு நான் தலைவணங்குகிறேன்’ என்று கூறியிருந்தார். அதைத் தொடர்ந்து கைலாஷ் சத்யார்த்தி புதுடெல்லியில் பிரதமரைச் சந்தித்தார். அப்போது மோடி அவரைக் கட்டி அணைத்து வாழ்த்தியதுடன் சால்வை அணிவித்துக் கௌரவித்தார்.

ஆனால் இம்முறை டெல்லியில் ஒரு மர்மமான அமைதி நிலவு கிறது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நவி பிள்ளையின் இந்த மகத்தான சாதனையைப் பற்றி பிரதமர் மோடி எதுவுமே நடக் காதது போல மௌனம் காக்கிறார். ஒவ்வொரு பேரிடரிலும் ஒரு வாய்ப்பைக் கண்டுபிடிக்கும் தந்திரமான அரசியல்வாதியின் நாவுக்கு இப்போது ஏன் பூட்டு விழுந்துவிட்டது? இந்தச் சாதனையை அவர் ஏன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை?

நவநீதம்
நவி பிள்ளை

கைலாஷ் சத்யார்த்திக்கு முன்னதாக 1979ஆம் ஆண்டு அன்னை தெரசாவுக்குத்தான் இந்தியாவைச் சேர்ந்த முதல் நபராக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அவர் கிறித்தவ மதத்தைப் பின்பற்றியவர் என்பதால் RSS உள்ளிட்ட சங்கப் பரிவார அமைப்புகள் அவரை முழுமை யான இந்தியராக மனதார ஏற்றுக்கொள்ளவில்லை.

அந்தக் காலகட்டத்தில் மோடியிடம் யாரும் பெரிதாகக் கருத்துக் கேட்கவில்லை என்பதால் வாயளவிலான போலித்தனத்தை வெளிப் படுத்த வேண்டிய அவசியமும் அவருக்கு ஏற்படவில்லை. ஆனால் இந்த முறை அவரது மௌனம் பல கேள்விகளை எழுப்புகிறது.

கடந்த வாரம் நார்வேயின் ஒஸ்லோ நக ரில் நடைபெற்ற விழாவில் நோபல் குழுவின் தலைவர் யோர்கன் வாட்னே ஃப்ரைட்னஸ், நவி பிள்ளையின் பெயரை அறிவித்தபோது உலகெங்கிலும் உள்ள அமைதியை விரும் புவோர் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் வெவ் வேறு காரணங்களுக்காக மூவர் அதிருப்தி அடைந்தனர். அவர்களில் முதன்மையானவர் இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகுதான். ஏனெனில் அவரை இனப்படுகொலைக் குற்றவாளி என்று நிறுவியவர் இந்த இரும் புப் பெண்மணிதான். நெதன்யாகுவின் கோபம் இயல்பானதுதான் என்றாலும் அது அவர் சுயமாகத் தேடிக்கொண்ட வினை. ஆனால் நவி பிள்ளை அதிபர் டொனால்ட் ட்ரம்பிடம் இப்படி நடந்து கொள்ளவில்லை; இருப்பினும் ஈரானைத் தாக்கியதன் மூலம் ட்ரம்பும் இந்த நிலைக்குத் தன்னைத் தகுதி யாக்கிக் கொண்டு விட்டார்.

டொனால்ட் ட்ரம்பின் குறை என்னவென் றால் ஏன் தனக்கு நோபல் பரிசு வழங்கப் படவில்லை என்பதுதான். பல ஆண்டுகளா கவே அவர் அந்தப் பரிசுக்காக ஏங்கிக் கொண் டிருக்கிறார். தனக்கு ஏன் நோபல் பரிசு வழங் கப்படவில்லை என்று புலம்புகிறார். பிரதமர் நரேந்திர மோடிக்கும் தர்மசங்கடமான நிலை. ஏனெனில் இந்த இருவரில் ஒருவரைத் தனது மூத்த சகோதரராகவும் மற்றொருவரை இளைய சகோதரராகவும் அவர் கருதுகிறார். எனவே அவர்களில் ஒருவரின் கோபத்துக்கு ஆளாகி விடுவோமோ என்ற அச்சத்தில் இந்திய வம்ச ாவளியைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு வாழ்த்துத் தெரிவிக்கக்கூட அவர் தயங்குகிறார்.

ட்ரம்பின் நோபல் ஆசையும் ஏமாற்றமும்

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் விவகாரம் மிகவும் சுவாரசியமானது. கடந்த ஆண்டு வெனிசுலாவின் எதிர்க் கட்சித் தலைவரான மரியா கொரினா மச்சாடோ, அந்நாட்டில் ஜனநாயக மாற்றத்திற் காகப் போராடியதற்காக அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார். ஜனநாயக விழுமியங்கள் நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருந்த காலத் தில் ஜனநாயகத்தின் சுடரை அணையாமல் பாதுகாத்ததற்காக அவர் பாராட்டப்பட்டார். அதற்குப் பின்னர் அமெரிக்கா வெனிசுலாவின் முன்னாள் அதிபர் நிக்கோலஸ் மதுரோவைக் கடத்தி ஆட்சியிலிருந்து அகற்றியது. இந்தச் சம்பவம் நடந்த சில காலத்திற்குப் பிறகு மச் சாடோ வெள்ளை மாளிகைக்குச் சென்று தனது நோபல் பதக்கத்தை டொனால்ட் ட்ரம்புக்குப் பரிசாக வழங்கினார். அமெரிக்க அதிபரும் மகிழ்ச்சியுடன் அந்தப் பரிசை ஏற்றுக் கொண் டார்.

ஆனால் பின்னர் நோபல் குழு ஓர் உண் மையைத் தெளிவுபடுத்தியது. இத்தகைய அடையாளப்பூர்வமான நடவடிக்கையின் மூலம் நோபல் பரிசை வேறொருவருக்கு மாற்றிக் கொடுக்க முடியாது என்பதே அந்த அறிவிப்பு. இதனால் அவரது மனநிலையைக் கெடுத்துவிட்டது. இருந்தாலும் அடுத்த ஆண்டாவது தனது அதிர்ஷ்டம் கை கொடுக் கும் என்று அவர் நம்பினார். இந்த ஆண்டும் விருது கிடைக்காததால் அவர் கட்டுப்பாட்டை இழந்து கோபமடைந்தார்.

அமைதிக்கான நோபல் பரிசு தனக்குக் கிடைக்காததால் கடும் அதிருப்தியடைந்த ட்ரம்ப் அந்த முடிவை 'வெட்கக்கேடான தீர்ப்பு' என்று விமர்சித்தார். இந்த முடிவு அந்த விருதை வழங்கும் குழு அமைந்துள்ள நார்வே நாட்டின் மீது அழியாத களங்கத்தை ஏற்படுத்திவிட்டதாகவும் கூறினார். உண் மையில் இறைவன் நாடி நோபல் குழு தவறுதலாக இந்த விருதை எப்ஸ்டீன் கோப்பின் நாயகர், காஸாவின் வில்லனுமான டொனால்ட் ட்ரம்புக்கு வழங்கியிருந்தால் அதுவே அந்த விருதின் நெற்றியில் அழி யாத களங்கமாக மாறியிருக்கும். அதன் பிறகு அந்த மதிப்புமிக்க விருதைப் பெறத் தகுதியானவர்கள், 'ட்ரம்ப் போன்ற மனம்

போன போக்கில் செயல்படுபவரின் பெயர் இடம்பெற்றுள்ள பட்டியலில் நாங்கள் இடம் பெற முடியாது' என்று கூறி அந்த விருதை ஏற்க மறுத்திருப்பார்கள்.

இந்த ஆண்டின் மருத்துவத்திற்கான நோபல் பரிசு, 'மூளை எவ்வாறு செயல்படுகிறது?' என்ற ரகசியத்தை வெளிப்படுத்திய மூன்று விஞ்ஞானிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது தற்செயலான ஒற்றுமை. ஆனால் மூளை செயல்படுவதை நிறுத்திவிட்டால் மனிதர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதற்கு டொனால்ட் ட்ரம்பும் அவரது இரு ஆதரவாளர்களும் மிகச் சிறந்த உதாரணங்களாக இருக்கிறார்கள்.

இந்தக் கருத்து கடுமையாகத் தோன்றினால் ட்ரம்பின் எதிர்வினையைப் பார்த்தாலே போதும். அமெரிக்க நாடாளுமன்றத்தின் இடைக்காலத் தேர்தலுக்கான பரப்புரையின் போது அவர் வெளிப்படுத்திய எதிர்வினை தான் இது. நியூயார்க் மாநிலத்தின் சிராக்யூஸ் நகரில் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்கு முன்பு இந்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின்(ICC) முன்னாள் நீதிபதி நவி பிள்ளைக்குக் கிடைத்திருப்பதை ட்ரம்ப் அறிந்தார். உடனே அவர் கடும் கோபமடைந்தார்.

தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த நவி பிள்ளை, காஸாவில் இஸ்ரேல் இனப்படுகொலைக் குற்றங்களைச் செய்துள்ளதாக முடிவுக்கு வந்த ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழுவுக்குத் தலைமை தாங்கியவர். இத்தகைய மகத்தான பணியைச் செய்த பெண்மணியைப் பற்றி ட்ரம்ப், 'இந்தப் பெண்ணைப் பற்றி நான் இதற்கு முன்பு கேள்விப்பட்டதே இல்லை. வேறு யாரும் இவருடைய பெயரைக் கேட்டிருப்பார்கள் என்றும் நான் நினைக்கவில்லை' என்று கூறி தனது அறியாமையை வெளிப்படுத்தினார்.

உண்மையில் அக்காலத்தில் மோடியைப் பற்றி யாரும் பொருட்படுத்தியதே இல்லை; உலகம் ட்ரம்பின் பெயரைக்கூட அறிந்திராத காலத்திலேயே, நவி பிள்ளை 2008 முதல் 2014 வரை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையராகப் பணியாற்றி வந்தார். இந்த உண்மை ட்ரம்புக்குத் தெரியவில்லை என்றால் பரவாயில்லை. ஆனால் இந்தியத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தென்னாப்பிரிக்கப் பெண்மணியான நவி பிள்ளையைப் பிரதமர் மோடியும் புறக்கணித்திருப்பது அவரது குறுகிய மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது.

தென்னாப்பிரிக்காவின் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றிய முதல் வெள்ளையரல்லாத பெண் நவி பிள்ளை என்பதை மோடி அறிந்திருக்க வேண்டும். இப்போது நோபல் பரிசைப் பெற்றதன் மூலம் அவர் உலக அரங்கில் இந்தியாவின் பெயரையும் உயர்த்தியுள்ளார். காவிக் கூட்டத்தினருக்கு கொஞ்சமாவது பெருந்தன்மை இருந்திருந்தால் வழக்கமான ஒரு வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுத் தங்களது கடமையை முடித்துக் கொண்டிருக்கலாம்.

இனவெறிக்கு எதிரான போராட்டத்திலிருந்து சர்வதேச நீதித்துறை வரை..!

1941ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் ஏழ்மையான தமிழ் இந்தியக் குடும்பத்தில் பிறந்த நவி பிள்ளை, இனவெறி நிலவிய காலத்தில் பல்வேறு கடுமையான சவால்களை எதிர்கொண்டார். தேநீர் விற்பனையைத் தேர்ந்தெடுக்காமல் சட்டக் கல்வியைப் பயின்றார்.

1967ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவின் நடால் மாகாணத்தில் சொந்தமாக வழக்கறிஞர் அலுவலகம் தொடங்கிய முதல் வெள்ளையரல்லாத பெண் என்ற பெருமையைப் பெற்றார். தென்னாப்பிரிக்க நீதிமன்றங்களில் பணியாற்றியதோடு மட்டுமல்லாமல் ருவாண்டாவுக்காக அமைக்கப்பட்ட சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின்(ICTR) தலைவராகவும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின்(ICC) நீதிபதியாகவும் பணியாற்றியுள்ளார். தற்போதும் அவர் சர்வதேச நீதிமன்றத்தில் (ICJ) தற்காலிக நீதிபதியாகப் பணியாற்றி

வருகிறார். சர்வதேச நீதிக்காக 2021 முதல் 2025 வரை கிழக்கு ஜெருசலேம் உட்பட ஆக்கிரமிக்கப்பட்ட ஃபலஸ்தீனப் பகுதிகள் இஸ்ரேல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சுதந்திரமான சர்வதேச விசாரணைக் குழுவுக்குத் தலைமை தாங்கினார். மேலும் இனப்படுகொலையைத் தடுப்பதற்கான ஒப்பந்தத்தின் கீழ் மியான்மருக்கு எதிராகக் காம்பியா தொடர்ந்த வழக்கில் சர்வதேச நீதிமன்றத்தில் தற்காலிக நீதிபதியாகவும் பணியாற்றியுள்ளார்.

இத்தகைய உலகப் புகழ்பெற்ற சட்ட நிபுணர் நவநீதம் நவி பிள்ளையைத் தனக்குத் தெரியாது என்று ட்ரம்ப் கூறுவது அவரது அறியாமையைக் காட்டுகிறது. இதற்காக அவர் வெட்கப்பட வேண்டும். காலத்திற்கேற்ப சிறு மாற்றத்துடன், கவிஞர் மிர்ஸா காலிப் எழுதிய புகழ்பெற்ற கவிதை வரிகள் ட்ரம்புக்குப் பொருந்துகின்றன: ‘எந்த முகத்தை வைத்துக்கொண்டு நோபல் பரிசைப் பெறுவாய், ட்ரம்ப்? உனக்கு வெட்கம் என்பதே இல்லையா?’

நோபல் பரிசைப் பொறுத்தவரை, ட்ரம்புக்கு இது ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் ஏமாற்றமாகும். ஏனெனில் அவருக்கு முன்பு அமெரிக்க அதிபராக இருந்த பராக் ஒபாமா இந்த விருதைப் பெற்றுள்ளார். தனது அதிபர் பதவிக் காலத்தில் கிட்டத்தட்ட ஒவ்வொரு ஆண்டும் இந்த விருது தனக்குக் கிடைக்காதது குறித்து ட்ரம்ப் தனது ஏமாற்றத்தையும் கோபத்தையும் வெளிப்படுத்தி வந்துள்ளார். இந்த முறை நார்வேயையும் நோபல் குழுவையும் குறிவைத்துப் பேசிய அவர், ‘இது நார்வேக்கும் இத்தகைய வெட்கக்கேடான, அவமானகரமான முடிவை எடுத்த அனைவருக்கும் அழியாத களங்கமாகும்’ என்று கூறினார். தனது உரையின் போது பல்வேறு சர்வதேச மோதல்களைப் பற்றிக் குறிப்பிட்ட ட்ரம்ப் வட கொரியா, தென் கொரியா, ஜப்பான் போர், வட கொரியா, சீனா, தைவான் ஆகியவற்றுக்கு இடையிலான போர்களைத் தடுக்கத் தாம் முக்கியப் பங்காற்றியதாகக் கூறினார். ஈரானைப் பற்றியும் அவர் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் அந்தப் போரைத் தொடங்கியதே அவர்தான்; இறுதியில் கடுமையான பின்னடைவையும் சந்தித்தார்.

கோபத்தின் உச்சத்தில் இருந்த ட்ரம்ப், ‘ஜனநாயகத்திற்கு எதிரானவர்களும், மனித நாகரிகத்தின் உண்மையான எதிரிகளுமான சில தீவிரக் கொள்கையாளர்கள் அமைதிக்கான நோபல் பரிசின் நம்பகத்தன்மையை நிரந்தரமாக அழித்துவிட்டனர். இதை நாங்கள் மறக்க மாட்டோம், நார்வே!’ என்றும் கூறினார். நவி பிள்ளையின் பின்னணியில் இந்தக் கருத்தைப் பரிசீலித்துப் பார்த்தால், சிறிய மாற்றத்துடன் இதே குற்றச்சாட்டு ட்ரம்புக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் பொருந்தும். உண்மையில், அந்த உரை இவ்வாறு அமைந்திருக்க வேண்டும்: ‘ஜனநாயகத்திற்கு எதிரானவர்களையும், மனித நாகரிகத்தின் உண்மையான எதிரிகளையும், தீவிரவாதக் கொள்கைகளைப் பின்பற்றுவோரையும் உலகிற்கு அம்பலப்படுத்திய ஒரு பெண்மணிக்கு அமைதிக்கான நோபல்பரிசை வழங்கியதன் மூலம், இந்த

உலகளாவிய குற்றவாளிகளைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய தண்டனை கிடைக்கச் செய்வதற்கான நேரம் வந்துவிட்டது. உண்மையில் நவி பிள்ளை சியோனிச அரசியல் கருத்தியலின் அடித்தளத்தையே அசைத்துள்ளார். இந்தியப் பிரதமர் மோடி நவி பிள்ளையின் இந்த மகத்தான சாதனையைப் புறக்கணித்துவிட்டார்.

விருதின் மதிப்பு பல மடங்கு உயர்ந்துள்ளது. எனவே நோபல் குழு என்றென்றும் நினைவு கூரப்படும். நார்வே வாழ்க!’

நீதி, பொறுப்பேற்பு, சட்டத்தின் ஆட்சி

நோபல் பரிசை அறிவித்தபோது, நவி பிள்ளையின் துணிச்சல், நேர்மை, சர்வதேச சட்ட அமைப்பை வலுப்படுத்துவதில் அவர் ஆற்றிய பங்களிப்புகளை நார்வே நோபல் குழு பாராட்டியது. சர்வதேசச் சட்டமும் அதை நடைமுறைப்படுத்த வேண்டிய அமைப்புகளும் அதிகரித்து வரும் அழுத் தங்களை எதிர்கொள்ளும் காலகட்டத்தில், நிலையான அமைதி என்பது நீதி, பொறுப் பேற்பு, சட்டத்தின் ஆட்சிக்கு அளிக்கப்படும் மரியாதை ஆகியவற்றைச் சார்ந்துள்ளது என்பதை இந்த விருது மீண்டும் உறுதிப் படுத்துவதாகக் குழு தெரிவித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ், நவி பிள்ளை யைப் பாராட்டிப் பேசுகையில், ‘சக்தியின் சட்டத்தைவிட சட்டத்தின் சக்திக்கே முன் னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதை யும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதே அநீதிக்கு எதிரான மிக வலுவான கேடயம் என்பதையும் அவர் நிரூபித்துள்ளார்’ என்று கூறினார்.

அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற நவி பிள்ளைக்கு வாழ்த்துத் தெரிவித்த குட்டரெஸ், அவரைச் சர்வதேசச் சட்டம், மனித உரி மைகளின் பாதுகாவலராகவும், நீதிக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்கும் சுதந்திரமான, உறுதியான குரலாகவும் வர்ணித்தார். ‘சர்வ தேசச் சட்டம், சட்டத்தின் ஆட்சி, மனித உரி மைகள், அமைதி, நீதி, மனித கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காகப் போரா டும் அனைவருக்கும் இந்த விருது வழங்கப் பட்டுள்ளது ஓர் அங்கீகாரமாகும்’ என்றும் அவர் வலியுறுத்தினார்.

நெதன்யாகு, ட்ரம்ப், மோடி ஆகியோ ருக்குச் சவாலாக இந்தக் குரல்கள் அமை யாமல் இருந்தால்தான் வியப்படைய வேண் டும். ஏனெனில் நவி பிள்ளை எதிர்த்துப் போராடி வரும் அடக்குமுறைக்கும் அநீதிக்கும் ஆதாரமாக இருப்பவர்கள் இந்த மூவரும்தான்.

காஸா இனப்படுகொலையும் நவி பிள்ளைக்குக் கிடைத்த அங்கீகாரமும்

‘ஆபரேஷன் அல்-அக்ஸா வெள்ளம்’, காஸா பகுதியின் மீது இஸ்ரேல் நடத்திய இனப்படுகொலை ஆகியவற்றுக்கு மூன்று ஆண்டுகள் நிறைவடையும் சூழலில், தனது அரசியல் இருப்புக்கான இறுதிப் போராட் டத்தில் நெதன்யாகு ஈடுபட்டிருக்கும் வேளையில் தென்னாப்பிரிக்காவின் புகழ் பெற்ற மனித உரிமைப் போராளியும் நீதிபதியுமான நவி பிள்ளைக்கு 2026ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. இது இஸ்ரேல் அரசுக்கு மிகப்பெரிய அரசியல், அறநெறி ரீதியான அதிர்ச்சியாகும்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், தனக்கு விருது கிடைக்காத ஏமாற்றத்திலி ருந்து மீண்டு வந்தால், ஒரு முக்கியமான உண்மையை உணர்வார். சர்வதேச நீதி அமைப் புகளைப் பலவீனப்படுத்தவும், ஃபலஸ்தீன மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடுமைகளுக் குப் பொறுப்பானவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்தும் முயற்சிகளை ஒடுக்கவும் அமெரிக்க நிர்வாகம் மேற்கொண்ட சதித் திட்டங்கள் அனைத்தும் தோல்வியடைந்து விட்டன என்பதே அந்த உண்மை. நவி பிள்ளை ஆக்கிரமிக்கப்பட்ட ஃபலஸ்தீனப் பகுதிகள், கிழக்கு(ஜெருசலேம் உட்பட), இஸ் ரேல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை யின் சுதந்திரமான சர்வதேச விசாரணைக் குழு வுக்குத் தலைமை தாங்கியவர் என்பதால் இந்த விருது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

2025 செப்டம்பரில் வெளியிடப்பட்ட அந்தக் குழுவின் அறிக்கையில், காஸா பகுதியில் இஸ்ரேல் கொடூரமான இனப் படுகொலைக் குற்றத்தைச் செய்துள்ளது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த விருது நீதி, மனித உரிமைகளுக்காக நீண்ட காலமாக நடத்தப்பட்டு வரும்

போராட்டத்திற்கான அங்கீகாரமாகும். அதே வேளையில் சர்வதேச அளவில் குற்றம் செய்தவர்களைப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் இது முன்வைக்கிறது.

உலகளாவிய குற்றவாளிகளைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய தண்டனை கிடைக்கச் செய்வதற்கான நேரம் வந்துவிட்டது. உண்மையில் நவி பிள்ளை சியோனிச அரசியல் கருத்தியலின் அடித்தளத்தையே அசைத்துள்ளார். இந்தியப் பிரதமர் மோடி நவி பிள்ளையின் இந்த மகத்தான சாதனையைப் புறக்கணித்துவிட்டார். ஆனால் ஹமாஸ் அமைப்பு அவருக்குச் சிறந்த பாராட்டைத் தெரிவித்தது.

ஹமாஸின் பாராட்டும் சர்வதேசப் பொறுப்பேற்புக்கான கோரிக்கையும்

நவி பிள்ளை அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றிருப்பது சர்வதேச நீதிக்கான பயணத்தில் மிக முக்கியமான முன்னேற்றம் என்று ஹமாஸ் தெரிவித்தது. ஆக்கிரமிப்பு அரசான இஸ்ரேல், ஃபலஸ்தீன மக்களுக்கு எதிராகக் கொடூரமான குற்றங்களைச் செய்துள்ளது என்பதை இந்த விருது சர்வதேச அளவில் அங்கீகரிப்பதாகவும் அது கூறியது. உலகத்தின் முன் அச்சமின்றியும் துணிச்சலுடனும் இந்த உண்மைகளை வெளிப்படுத்திய நவி பிள்ளை நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டியவர் என்றும் ஹமாஸ் தெரிவித்தது.

தற்பெருமையில் மூழ்கியிருக்கும் ட்ரம்ப் போன்றவர்களுக்கு ஒரு முக்கியமான உண்மையை ஹமாஸ் நினைவூட்டியது. நவி பிள்ளை தென்னாப்பிரிக்காவில் இனவெறி ஆட்சி முறைக்கு எதிராகப் போராடியவர்களைப் பாதுகாத்ததுடன், ருவாண்டாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்திற்கும் தலைமை தாங்கியுள்ளார். ஃபலஸ்தீன் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழுவுக்குத் தலைமை தாங்கிய அவரது பணி, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் சர்வதேசக் குற்றவாளிகளைப் பொறுப்பேற்கச் செய்வதற்கும் அவர் மேற்கொண்ட போராட்டத்தைப் பிரதிபலிக்கிறது.

காஸா தொடர்பான சர்வதேச விசாரணைக் குழுவின் ஆதாரப்பூர்வமான முடிவுகளை நடைமுறைப்படுத்தி, குற்றவாளிகளை நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் ஹமாஸ் வலியுறுத்தியது. இந்த ஒடுக்குமுறை அமைப்புக்கு முடிவு கட்டுவதற்காக, சர்வதேசச் சமூகம் தனது சட்டரீதியான, அறநெறி சார்ந்த பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் அது கோரியது. பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவிக்கவில்லை என்றாலும், தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா நவி பிள்ளையின் இந்த வரலாற்றுச் சாதனைக்காக அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார். நவி பிள்ளைக்குக் கிடைத்துள்ள இந்தக் கௌரவம், அவரது துணிச்சல், நேர்மை, தனது வாழ்நாள் முழுவதையும் நீதிக்காக அர்ப்பணித்துக் கொண்ட அவரது உறுதியின் உச்சகட்ட அங்கீகாரம் என்று அவர் குறிப்பிட்டார்.

ஒரு வாட்ஸ்அப் மெஸேஜ் போதும்!

- இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.
- இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்
- இது ஓர் அஞ்சல் வழி நூலகம்

உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.

இஸ்லாமிக் அகாடமி
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
மின்னஞ்சல் : postallibrary@gmail.com

உங்களுக்கு மரணம் எப்போது வரும்?

• அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

‘(இறுதித் தீர்ப்புக்குரிய) அந்த வேளையைப் பற்றிய ஞானம் அல்லாஹ்விடமே உள்ளது. அவனே மழையைப் பொழிவிக்கின்றான். அன்னையரின் கருவறைகளில் வளர்ந்து கொண்டிருப்பவை என்ன என்பதையும் அவனே அறிவான். எந்த மனிதனும் அவன் நாளை என்ன சம்பாதிக்கப் போகின்றான் என்பதை அறிவதில்லை. தான் எந்தப் பூமியில் மரணமடைவோம் என்பதும் எந்த மனிதருக்கும் தெரியாது. திண்ணமாக அல்லாஹ்தான் யாவற்றையும் நன்கு அறிபவனாகவும் தெரிந்தவனாகவும் இருக்கின்றான்’ - திருகுர்ஆன் 31:34

எவரும் அறியாத, அல்லாஹ் மாத்திரம் அறிந்த மறைவான ஐந்து விஷயங்களை மேற்கண்ட திருக்குர்ஆன் வசனம் சொல்கின்றது. அவற்றுள் முக்கியமானது மரணம்.

‘நாளை ஒருவர் என்ன சம்பாதிப்பார் என்பதை எவரும் அறிய மாட்டார். தான் எந்த பூமியில் மரணிப்பார் என்பதையும் எவரும் அறிய மாட்டார்’

உங்கள் மரணம் ஒரு விசேசமான நாளில் வர வேண்டும் என்பதில்லை. அது ஒரு சாதாரண நாளில் வரலாம். மற்ற நாள்களைப் போலவே அந்த நாளும் விடியும். சூரியன் உதிக்கும், மக்கள் தங்களுடைய வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருப்பார்கள். உலகம் தனது வழக்கமான பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கும். ஆனால் உங்களுக்கோ அது உங்கள் இறைவனிடம் திரும்பிச் செல்லும் நாளாக இருக்கும்.

அன்று உங்களுக்குப் பல திட்டங்கள் இருக்கும். நாளை செய்ய வேண்டிய பணிகள் இருக்கும். செல்ல வேண்டிய இடங்கள் இருக்கும். சந்திக்க வேண்டிய மனிதர்கள் இருப்பார்கள். நிறைவேற வேண்டிய கனவுகளும் இருக்கும். ஆனால் திடீரென்று வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அந்த நேரம் வந்துவிடும்.

நீங்கள் பேசிய அலைப்பேசி அழைப்பு அது உங்கள் இறுதி அழைப்பாக இருக்கலாம்; ஆனால் அது இறுதி அழைப்பு என்பதை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள். நீங்கள் பகிர்ந்த ஒரு சிரிப்பு அது உங்கள் இறுதிச் சிரிப்பாக இருக்கலாம். நீங்கள் கொடுத்த ஒரு கை குலுக்கல் அது உங்கள் இறுதிக் கைகுலுக்கலாக இருக்கலாம். நீங்கள் உங்களது குழந்தைக்குக் கொடுத்த ஒரு முத்தம் அது நீங்கள் கொடுத்த

இறுதிமுத்தமாக இருக்கலாம். நீங்கள் உண்ட உணவு அது உங்கள் இறுதி உணவாக இருக்கலாம்.

நீங்கள் கண்ட சூரிய அஸ்தமனம் அது நீங்கள் காணும் இறுதி சூரிய அஸ்தமனமாக இருக்கலாம். நீங்கள் நிறைவேற்றிய ஒரு தொழுகை அது உங்கள் இறுதித் தொழுகையாக இருக்கலாம். நீங்கள் ஓதிய குர்ஆன் அது உங்கள் இறுதி ஓதலாக இருக்கலாம். நீங்கள் செய்த திக்ர்(இறை தியானம்) அது இறுதியானதாக இருக்கலாம். ஆனால் இவற்றில் எதுவுமே இறுதியாக நீங்கள் செய்தது என்பதை அந்த நேரத்தில் நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள்.

நாள் எப்போது வந்தாலும், 'நான் தயாராக இருக்கிறேன்' என்று சொல்லக்கூடிய வாழ்க்கையை நாம் வாழ வேண்டும்.

வாழ்க்கையில் தாமதம் நல்லதல்ல. நாம் செய்ய விரும்பும் எந்தவொரு நல்ல காரியத்தையும் தள்ளிப்போடுவது உகந்ததல்ல. மன்னிப்புக் கேட்க வேண்டியிருந்தால் இன்றே கேட்டுவிட வேண்டும். மன்னிக்க வேண்டியிருந்தால் இன்றே மன்னித்துவிட வேண்டும். அன்பை வெளிப்படுத்த வேண்டியிருந்தால் இன்றே அதை வெளிப்படுத்திவிட வேண்டும். ஏதாவது ஒரு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டியிருந்தால் இன்றே அதனைச் செய்துவிட வேண்டும்.

மற்ற நாள்களைப் போலவே அந்த நாளும் விடியும். சூரியன் உதிக்கும், மக்கள் தங்களுடைய வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருப்பார்கள். உலகம் தனது வழக்கமான பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கும். ஆனால் உங்களுக்கோ அது உங்கள் இறைவனிடம் திரும்பிச் செல்லும் நாளாக இருக்கும்.

உங்களது மரணம் எப்போது வரும், எங்கே வரும், எவ்வாறு வரும் என்பது யாருக்கும் தெரியாது. அது உங்கள் சொந்த ஊரிலேயே வர வேண்டிய அவசியமில்லை. வெளியூரில் இருக்கும்போதோ பயணத்திலோ வாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போதோ அல்லது நீங்கள் எதிர்பாராத வேறு எந்த இடத்திலோ எந்த நிலையிலோ அது வரலாம்.

உலக வாழ்வு தொடர்பிலான இந்த உண்மை நம் அனைவரின் உள்ளங்களிலும் எப்போதும் இருக்க வேண்டும். எவருக்கும் நாளை என்பது நிச்சயம் அல்ல. ஒவ்வொரு வரும் அவர் அறியாத ஒரு நாளில் எதிர்பாராத ஒரு தருணத்தில் இந்த உலகப் பயணத்தை முடித்துக் கொண்டு அல்லாஹ்விடம் திரும்பிச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்த

நல்லதைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டால் அதை பின்னர் என்று தள்ளிப்போடாமல் இப்போதே செய்ய முயற்சி செய்ய வேண்டும். இதனால் தான் நபி(ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகையையும் இறுதித் தொழுகையைப் போன்று நினைத்து உணர்வுடனும் கவனத்துடனும் தொழ வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்: 'நீர் தொழுகைக்காக எழுந்து நிற்கும்போது, விடைபெறுபவரின் தொழுகையைப் போன்று தொழுவீராக.' (இப்னுமாஜா, அஹ்மத்)

'யா அல்லாஹ்! எங்கள் முடிவை நல்ல முடிவாக ஆக்குவாயாக. எங்களை மன்னித்து எங்களுக்கு அருள் புரிவாயாக! உன்னைச் சந்திக்கும் நாளை எங்கள் வாழ்வின் சிறந்த நாளாக ஆக்குவாயாக!'

திருக்குர்ஆன்
மனிதகுல வழிகாட்டி

- மு.முஹம்மது இம்ரான்
அஸ் ஸலாம் இஸ்லாமியக் கல்லூரி மாணவர்

திருக்குர்ஆன் தொழுகை, நோன்பு போன்ற வழிபாடுகள் சட்டங்களைப் பற்றிக் கூறுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. மனிதனின் தனிப்பட்ட, குடும்ப, சமூக, பொருளாதார, வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு வழிகாட்டுதல்களையும் வழங்குகிறது. வணிகம், வானியல், பொருளாதாரம், அறிவியல், மருத்துவம், சட்டம், வரலாறு போன்ற பல துறைகள் தொடர்பான சிந்தனைகளையும் திருக்குர்ஆன் முன் வைக்கிறது.

திருக்குர்ஆன் கூறும் வணிகம்

திருக்குர்ஆன் வணிகம், பொருளாதாரம் குறித்து தெளிவான வழிகாட்டுதல்களை வழங்குகிறது. வியாபாரத்தில் எது அனுமதிக் கப்பட்டது? எது தடை செய்யப்பட்டது? வியாபாரம் எப்படி நடக்க வேண்டும்? நேர்மையான வணிகம் எது? என்பன போன்ற கேள்விகளுக்கு விடையளிக்கின்றது.

‘உண்மையில் அல்லாஹ் வியாபாரத்தை அனுமதிக்கப்பட்டதாகவும்; வட்டியை தடுக் கப்பட்டதாகவும் ஆக்கியுள்ளான்’ (திருக் குர்ஆன் 2:275)

‘இறைநம்பிக்கை கொண்டோரே! நீங்கள் உண்மையில் நம்பிக்கையாளராக இருப்பின் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; (உங்களுக்கு வரவேண்டிய) வட்டிப் பாக்கிகளை விட்டு விடுங்கள். ஆனால் அவ்வாறு நீங்கள் செய்யாவிடின் அல்லாஹ்விடமிருந்தும், அவனுடைய தூதரிடமிருந்தும் (உங்களுக்கு எதிராக) போர் அறிவிக்கப்பட்டு விட்டதென் பதை அறிந்து கொள்ளுங்கள்’ (திருக்குர்ஆன் 2:278,279)

‘உங்கள் விருப்பத்தின் அடிப்படையில் கொடுக்கல் வாங்கல் இருக்க வேண்டும்’ (திருக்குர்ஆன் 4:29)

‘நீங்கள் அளந்து கொடுக்கும்போது நிறை வாக அளந்து கொடுங்கள். எடைபோடும் போது சரியான தராசு கொண்டு எடை போடுங்கள். இதுவே முறையானதும் மிக நல்லதுமாகும்’ (திருக்குர்ஆன் 17:35)

மத்யன்வாசிகள் எடை மோசடி செய்து கொண்டிருந்த காரணத்தால் அவர்களுக்கு அல்லாஹ் ஷுஐப்(அலை) அவர்களை நபி யாக அனுப்பினான், அப்போது அவர்கள் மக்களிடம் : ‘என்னுடைய சமுதாயத்தினரே! நேர்மையான முறையில் முழுமையாய் அளந்து கொடுங்கள்; முழுமையாய் நிறுத் துக் கொடுங்கள்! மேலும் மக்களுக்கு அவர் களுடைய பொருட்களைக் குறைத்துத் தரா தீர்கள்! பூமியில் குழப்பம் செய்து கொண்டு திரியாதீர்கள்!’ (திருக்குர்ஆன் 11:85)

கணக்கியல்

குர்ஆனில் கணக்கியல் தொடர்பாக மிகவும் முக்கியமான வழிகாட்டுதல் காணப் படுகிறது. குர்ஆனின் மிக நீளமான வசனமான 'ஆயத்துத் தைன்' எனப்படும் கடன் வசனத்தில், கடன் கொடுக்கல் வாங்கலை முறையாகப் பதிவு செய்யுமாறு கூறுகிறது. குறிப்பிட்ட காலக்கெடு, சாட்சிகளை ஏற் படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலி யுறுத்துகிறது. இதன் மூலம் நிதி பரிவர்த் தனைகளில் தெளிவு, நேர்மை, பாதுகாப்பு ஏற்படுவதுடன், கணக்கியலின் முக்கியத் துவத்தையும் குர்ஆன் உணர்த்துகிறது.

'இறைநம்பிக்கையாளர்களே! ஒரு குறிப் பிட்ட தவணையை நிர்ணயித்து நீங்கள் உங்களுக்குள் கடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டால், அதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்' (திருக்குர்ஆன் 2:282).

இன்றைய கணக்கியல் முறைகளில் காணப்படும் ஆவணப்படுத்துதல், பதிவு செய்தல் போன்றவற்றின் முக்கியத்துவத்தை இந்த வசனம் நமக்கு உணர்த்துகிறது.

அறிவியல்

இன்று புதிதாக வெளிவரும் பல ஆராய்ச்சிகளையும் கண்டுபிடிப்புகளையும், 1400 ஆண்டுகளுக்கு முன்பே குர்ஆன் குறிப் பிட்டுள்ளது. உதாரணமாக:

'ஒவ்வொரு உயிரினத்தையும் தண்ணீரி லிருந்து நாம் படைத்தோம்' (திருக்குர்ஆன் 21:30)

இதைக் குறித்து Mayo Clinic 2026 ஜனவரி மாதம் வெளியிட்ட அறிக்கையில், 'உங்கள் உடல் எடையில் சுமார் 50% முதல் 65% வரை தண்ணீர் உள்ளது. அது உங்கள் செல்கள், தசைகள், உறுப்புகளில் உள்ளது. உங்கள் எலும்புகளில்கூட தண்ணீர் இருக் கிறது. மேலும் உங்கள் செல்களைச் சுற்றி யுள்ள இரத்தம், திசுக்களிலும் தண்ணீர் உள் ளது. உடலில் உள்ள செல்கள், திசுக்கள், உறுப்புகள் சரியாகச் செயல்பட தண்ணீர் தேவைப்படுகிறது' என்று கூறுகிறது.

திருமறைக் குர்ஆன் கூறுகிறது. 'வானங்கள், பூமி அனைத்தும் ஒன்றோடொன்று சேர்ந் திருந்தன. பிறகு அவற்றை நாம் தனித்தனி யாகப் பிளந்தோம்' (திருக்குர்ஆன் 21:30)

இதைதான் 1949இல் பிரெட் ஹாய்லே Big Bang என்று அழைத்தார். இதைக் குறித்து NASA 'பிரபஞ்சம் சுமார் 13.8 பில்லியன் ஆண்டுகள் பழமையானதாகத் தோன்றுகிறது' என்று குறிப்பிடுகிறது.

நாம் பயன்படுத்தும் இரும்பு வானத்தி லிருந்து இறைவன் இறக்கினான் என்பதாகக் குர்ஆன் கூறுகின்றது. அதை 1868இல் எம்.இ. வால்ராத்தின் தனது History of the Earth's For-mation என்ற புத்தகத்தில் 'இரும்பு என்பது பூமியில் இயற்கையாகவே இருந்த ஓர் உறுப்பு அல்ல. ஒரு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விண்கல் பூமியில் தாக்கியதாக ஆய்வுகள் கூறுகின்றன. இந்த விண்கல்லில் இரும்பு இருந்தது, நம் கிரகத்துடன் தொடர்பு கொண்டு வெடித்த போது பூமிக்கு இரும்பு வந்தது.

மருத்துவம்

'அந்தத் தேனீக்களின் உள்ளே இருந்து பலவிதமான நிறமுடைய ஒரு பானம் வெளிப் படுகின்றது. அதில் மக்களுக்கு நிவாரணம் இருக்கிறது' (திருக்குர்ஆன் 16:69)

இன்று நம்மில் பலர் இருமல், காயம், தொண்டை வலி ஆகியவற்றிற்குத் தேனை நிவாரணமாகப் பயன்படுத்துகின்றோம். இதை 19ஆம் நூற்றாண்டிலேயே பல ஆய்வாளர்கள் அறிவியல் பூர்வமாக நிரூபித்து விட்டார்கள்.

மேலும் மனிதன் எவ்வாறு படைக்கப் பட்டான் என்பதை சூரத்துல் முஃமினூனின் 12, 13, 14 ஆகிய வசனங்களில் அழகான முறையில் மிகத் தெளிவாகக் கூறுகிறான். அரசியல், பொருளியல், பொறியியில், உயிரி யல், விலங்கியல், ஊடகம் போன்ற பல துறை களைப் பற்றி திருக்குர்ஆன் பேசுகின்றது. திருக் குர்ஆன் என்பது வணக்க வழிபாடுகளைத் தாண்டி மனித வாழ்விற்கான முழுமையான வழிகாட்டி என்பதை உணர்வோம்.

இறைவன் நாடியவர்களுக்கே நேர்வழி!

உண்மையாக ஷைத்தான் உங்களின் பகைவனாவான். ஆகையால், நீங்களும் அவனை உங்களின் பகைவனாகவே கருதுங்கள். அவன் தன்னைப் பின்பற்றுபவர்களைத் தனது வழியில் அழைத்துக் கொண்டிருப்பது, அவர்கள் நரகவாசிகளுடன் இணைந்துவிட வேண்டுமென்பதற்காகத்தான்! எவர்கள் நிராகரிக்கின்றார்களோ,[13] அவர்களுக்குக் கடுமையான வேதனை இருக்கின்றது. மேலும், எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிகின்றார்களோ அவர்களுக்கு மன்னிப்பும் பெரும் கூலியும் இருக்கின்றன.[14]

எந்த[15] மனிதனுக்கு அவனுடைய தீயசெயல் அலங்காரமாக்கப்பட்டிருக்கின்றதோ, மேலும் அதனை அவன் நல்லதென்று கருதிக் கொண்டிருக்கின்றானோ (அந்த மனிதனின் வழிகேட்டிற்கு எல்லையேதும் உண்டா என்ன?)[16] திண்ணமாக, அல்லாஹ் தான் நாடுவோரை நெறிபிறழச் செய்கின்றான். மேலும், தான் நாடுவோரை நேர்வழியில் செலுத்துகின்றான். எனவே (நபியே!) இவர்களுக்காகத் துக்கமும் வேதனையும் அடைந்தே உமது உயிர் உருகிப்போய்விட வேண்டாம்.[17] இவர்கள் செய்து கொண்டிருக்கின்ற அனைத்தையும் திண்ணமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான்.[18]

● அத்தியாயம் 35 ஃபாத்திர் ● திருவசனங்கள் : 6 - 8

13. இறைவனின் வேதத்தையும் அவனுடைய தூதரின் இந்த அழைப்பையும் ஏற்றுக் கொள்ள எவர்கள் மறுத்தார்களோ..

14. வல்லமையும் மகத்துவமும் நிறைந்த அல்லாஹ் அவர்களின் பிழைகளை மன்னித்தருள்வான். மேலும் அவர்களின் நல்லறங்களுக்காக அவற்றுக்குரிய நற்கூலியைத் தருவதோடு நிறுத்திக் கொள்ள மாட்டான். அதற்கும் மேலாக அவர்களுக்கு மிகப் பெரும் நற்கூலிகளை அள்ளி அள்ளி வழங்குவான்.

15. இதற்கு முந்தைய வசனங்களில் பொது மக்களை விளித்து கருத்துரை நல்கப்பட்டிருந்தது. இப்போது நபிகளாரின் அழைப்பை மட்டம் தட்டுகின்ற வேலையில் முழுமூச்சாகவும் மும்முரமாகவும் இறங்கியிருந்த அறியாமைக் கொடியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்த பேர்வழிகள் குறித்துச் சொல்லப்படுகின்றது.

16. வழிகெட்டுப் போன மனிதன் எப்படிப்பட்டவன் எனில் அவன் தீய செயல்களில் ஈடுபட்டாலும்கூட தாம் செய்வதெல்லாம் தீமைகள் என்பதை அறிந்தவனாக, ஒப்புக் கொண்டவனாக இருப்பான். இத்தகைய மனிதர்களை அறிவுரை கூறி சீர்திருத்திவிட முடியும். மேலும் அவனுடைய மனசாட்சியே அவனை உறுத்தி, உலுக்கி நேர்வழியின் பக்கம் அவனை உந்தித் தள்ளிவிடுவதற்கான சாத்தியமும் இருக்கின்றது. ஏனெனில் அவனுடைய பழக்கங்கள்தாம் சீர்குலைந்திருந்தனவே தவிர அவனுடைய சிந்தனையும் மனமும் சீர்கெட்டுப் போய்விடவில்லை.

ஆனால் வேறு சில மனிதர்களோ எந்த அளவுக்கு வழிகேடுகளில் மூழ்கியிருப்பார்கள் எனில் அவர்களின் சிந்தனை, சொல், செயல் அனைத்துமே தீமைகளில் திளைத்துக் கொண்டிருக்கும். நல்லது, கெட்டதைப் பிரித்தறிகின்ற திறனைக் கூட அவர்கள் இழந்திருப்பார்கள். பாவச் செயல்களில் திளைப்பதில் அவர்கள் மோகங் கொண்டவர்களாக அதனையே தம்முடைய ஒளிமயமான வாழ்வாக ஆக்கிக் கொண்டிருப்பார்கள். நன்மைகளின் பேச்சை எடுத்தாலே அவர்கள் அருவருப்பாக உணர்வார்கள். தீமைகளைத்தாம் அவர்கள் உண்மையான நாகரிகமாக, பண்பாடாகக் கொண்டாடுவார்கள். சீர்திருத்தப் பேச்சையும் இறையச்சம் தொடர்பான போதனையையும்

28ஆம் பக்கம் பார்க்க...

● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

இறைவனின் பொருள் சுவனமாகும்!

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: '(பின்னிரவில் எதிரி தாக்குதல் தொடுக்க இருக்கின்றார் என்கிற) அச்சம் எவரைத் தொற்றிக் கொள்கின்றதோ அவர் இரவின் முதல் பகுதியிலேயே விழித்துக் கொள்கின்றார். மேலும் இரவின் முதல் பகுதியிலேயே ஓடத் தொடங்கி விடுபவர்தாம் இலக்கை அடைகின்றார். கேட்டுக் கொள்ளுங்கள். இறைவனின் பொருள் விலைமதிப்புமிக்கதாகும். கேட்டுக் கொள்ளுங்கள். இறைவனின் பொருள் சுவனமாகும்.'

அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி)
நூல் : திர்மிதி

மனிதன் ஒருபோதும் அலட்சியமாக இருந்துவிடக் கூடாது என்பதை இந்த நபி மொழியில் நபி(ஸல்) அவர்கள் எடுத்துக்காட்டு ஒன்றைக் கொண்டு விளக்கி இருக்கின்றார்கள். எதிரி விடியற்காலையில் தாக்குதல் தொடுக்கத் திட்டமிட்டு இருக்கின்றான் என்பது உறுதியானதும் பயணக் குழுவில் இருப்பவர்கள் இரவின் முதல் பகுதியிலேயே (தம்முடைய கூடாரத்தைக் களைந்து) பயணம் கிளம்பி விட வேண்டும். இவ்வாறாக பயணக் குழுவினரால் பாதுகாப்பாகவும் நலமாகவும் தம்முடைய இலக்கைச் சென்றடைவது சாத்தியமாகும். சூறையாடிக் கொள்ளையடிக்கத் திட்டமிட்ட எதிரிகளால் அவர்களுக்கு இம்மியளவுகூட பாதிப்பு ஏற்படாது.

இறைவன் தன்னுடைய அடியார்களுக்குத் தனிச் சிறப்புமிக்க பொருள் ஒன்றை வழங்க இருப்பதாக வாக்குறுதி அளிக்க, ஷைத்தான்களும் ஷைத்தானிய குணங்களைக் கொண்டவர்களும் அந்தத் தனிச் சிறப்புமிக்க பொருள் அந்த அடியார்களுக்குக் கிடைத்து விடக் கூடாது என்கிற கவலையில்தான் எந்நேரமும் மூழ்கியிருக்கின்றார்கள்.

இறைப்பற்றுடன் இறைவனுக்கு அஞ்சி, இறைவனுக்கு மாறு செய்வதைத் தவிர்த்து இறைக்கட்டளைகளின்படி வாழ்கின்ற நடத்தைக்குப் பதிலாக மன இச்சைகள் இழுக்கின்ற இழுப்புகளுக்கெல்லாம் வளைந்து கொடுப்பவர்களாய், மன இச்சைகளின் அழுத்தங்களுக்கெல்லாம் அமுங்கி விடுபவர்களாய், எங்கேயும் எப்போதும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உலக மோகம் கொண்டு அலைபவர்களாய் இறைவனின் அடியார்கள் ஆகிவிட வேண்டும் அதுவே அவர்களின் அடையாளங்களாய் ஆகிவிட வேண்டும் என்றெல்லாம் அந்த ஷைத்தான்களும் ஷைத்தானிய குணங் கொண்டவர்களும் விரும்புகின்றார்கள்.

இந்த நிலையில் 'இறைவன் தன்னுடைய அடியார்களுக்கு வழங்குவதாய் வாக்குறுதி அளித்துள்ள தனிச் சிறப்புமிக்க பொருளை விட விலை மதிப்புமிக்க பொருள் எதுவும் ஈருலகிலும் இருப்பதற்கான சாத்தியமே இல்லை; சுவனம்தான் அந்தத் தனிச் சிறப்புமிக்க பொருள்; உங்களுக்கு இந்தத் தனிச் சிறப்பு மிக்க செல்வம் கிடைக்காமல் போய்விடச் செய்வதில் அந்த எதிரிகள் வெற்றி பெற்றுவிடக் கூடாது; அழிவைத் தவிர வேறு எதுவும் கிடைக்காத நிலைக்கு நீங்கள் ஆளாகிவிடக் கூடாது; எனவே இறைவனின் அந்தத் தனிச் சிறப்பு மிக்க பொருளை அடைகின்ற விஷயத்தில் சோம்பலுடனும் அலட்சியத்துடனும் ஒரு போதும் நடந்துகொள்ளக்கூடாது. அதற்கு மாறாக எந்தவிதமான தாமதமும் செய்யாமல் அதனை அடைவதற்காகக் களம் இறங்கி விட வேண்டும்' என்று நபி(ஸல்) அவர்கள் எச்சரிக்கின்றார்கள்.

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...

பிற்போக்குத்தனமான செயல்களாகவும், பெரும்பாவங்களையும் மாபாதகக் குற்றங் களையும் முற்போக்கான செயல்களாகவும் அவர்கள் பார்ப்பார்கள். அவர்களின் கண் களுக்கு வழிகாட்டுதல் வழிகேடாகவும் வழி கேடோ வழிகாட்டுதலாகவும் மாறிவிடும்.

இத்தகைய மனிதர்களுக்கு அறிவுரை களைச் சொல்வது எந்தப் பயனையும் தராது. அவர்கள் தங்களின் முட்டாள்த்தனமான செயல்களாலும் எச்சரிக்கை அடைவதில்லை; மற்றவர்களின் அறிவுரைகளையும் அவர் களால் காது கொடுத்துக் கேட்கவும் முடிவ தில்லை. இத்தகைய மனிதர்களைச் சீர்திருத்து கிற நோக்கத்துடன் இவர்களை மீண்டும் மீண்டும் சந்திப்பதும் இவர்களின் பின் னால் சுற்றுவதும் எந்தப் பயனையும் தராது. இவர்களுக்கு வழிகாட்டுதல் கிடைத்து விட வேண்டுமென்பதற்காக சத்திய அழைப் பாளர்கள் தம்முடைய நேரத்தையும் ஆற்ற லையும் செலவிடுவது வீண் தான். அதற்குப் பதிலாக மனசாட்சியை உயிர்த் துடிப்போடு வைத்திருப்பவர்களின் பக்கம், சத்திய மார்க் கத்தின் பக்கம் அழைப்பு விடுக்கிற குரலை காது கொடுத்துக் கேட்பவர்களின் பக்கம், தங்களின் இதயத்துக் கதவுகளை இறுக மூடிக் கொள்ளாதவர்களின் பக்கம் தங்களின் கவனத் தைச் செலுத்த வேண்டும்.

17. முந்தைய வாசகத்துக்கும் இந்த வாசகத்துக்கும் இடையில், ‘திண்ணமாக அல்லாஹ் தான் நாடுவோரை நெறி பிறழச் செய்கின்றான். மேலும் தான் நாடுவோரை நேர்வழியில் செலுத்துகின்றான்’ என்கிற இறைவாக்கு அருளப்பட்டிருக்கின்றது. தங் களின் சிந்தையைக் குலைத்துக் கொள்கின்ற மனிதர்களுக்கு வல்லமையும் மாண்பும் நிறைந்த அல்லாஹ் ‘வழிகாட்டுதல்’ எனும் செல்வம் கிடைக்கப் பெறாமலே செய்துவிடு கின்றான் என்பதையும் அவர்கள் தங்களின் வாழ்க்கையை நடத்துவதற்காக எந்தெந்த குறுக்குச் சந்துகளில் அலைந்து திரிந்தே தீரு வோம் என்று பிடிவாதம் பிடித்தார்களோ அந்தக் கோணல் மாணலான வழிகளிலேயே அவர்களை சுற்றித் திரிந்து கொண்டிருக்க விட்டு விடுகின்றான் என்பதையும் இந்த இறைவாக்கு தெளிவுபடுத்திவிடுகின்றது.

இந்த யதார்த்த நிலையைப் புரிய வைத்துவிட்ட பிறகு, ‘இப்படிப்பட்ட மனிதர் களை நேர்வழியில் கொண்டு வருவது உம்மு டைய சக்திக்கு அப்பாற்பட்டதாகும். எனவே, பொறுமையை மேற்கொள்வீராக. அந்த மனிதர்களைப் பற்றிய எந்த அக்கறையும் இறைவனுக்கு இருக்கவில்லை. அதே போன்று நீங்களும் அந்த மனிதர்களின் நிலைமையை நினைத்து நினைத்து, தவித்து தண்ணீராக உருகுவதையும் வருந்துவதையும் விட்டு விடுவீராக’ என்று வல்லமையும் மாண்பும் நிறைந்த இறைவன் நபிகளாருக்கு அறிவுறுத்து கின்றான்.

இந்த இடத்தில் இரண்டு விஷயங்களை நல்ல முறையில் விளங்கிக் கொள்வது அவசிய மாகும். முதலாவதாக இங்கு எவர்களைக் குறித்துக் குறிப்பிடப்படுகின்றதோ அவர்கள் சாமான்யர்கள் அல்லர். அதற்கு மாறாக மக்கத்து மாநகரத்தின் கோத்திரத் தலைவர்கள் - அதற்கும் மேலாக நபிகளாரின் அழைப் பையும் இயக்கத்தையும் முறியடிப்பதற்காக எல்லாவகையான பொய்களையும் மோசடி களையும் செப்படி வித்தைகளையும் சூழ்ச்சி களையும் மேற்கொண்டு வந்த குறைஷித் தலைவர்கள் குறித்துத்தான் இங்கு குறிப்பிடப் படுகின்றது. இன்னும் சொல்லப் போனால் இந்தப் பெருந்தலைகள் நபிகளாரைக் குறித்து தவறான கருத்து கொண்டிருக்கவில்லை.

நபிகளார்(ஸல்) எதன் பக்கம் அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ப தையும், நபிகளாருடன் ஒப்பிடுகின்ற போது தாம் என்னென்ன விதமான அறியாமைகளை யும் ஒழுக்கச் சீர்கேடுகளையும் தக்க வைத்துக் கொள்வதற்காக அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் அவர்கள் நல்ல முறையில் அறிந்திருந்தார்கள். எல்லாவற்றையும் நல்ல முறையில் அறிந்த பிறகு அனைத்தையும் தெள்ளத்தெளிவாகப் புரிந்துகொண்ட பிறகு நபிகளாரின் அழைப்பை எடுபட விடக்கூடாது என்று

அவர்கள் ஆற அமர யோசித்து தீர்மானித்திருந்தார்கள். இதற்காக எந்த எல்லையையும் தாண்டி விடுவதற்கும் இழிவான உத்திகளையும் கயமைத்தனமான சூழ்ச்சிகளையும் மேற்கொள்வதற்கும் அவர்களுக்குத் தயக்கமோ தடுமாற்றமோ இருக்கவில்லை.

ஒருவர் மீது புதுப்புதுக் குற்றச்சாட்டுகளைப் புனைந்துரைப்பதற்காகவும், அவருக்கு எதிராக அவற்றைப் பரப்புவதற்காகவும் நாள்தோறும் கூடிப்பேசுகிற கலந்தாலோசிக்கின்ற மனிதர்கள் தங்களின் அந்தச் சூழ்ச்சிகளால் உலகத்தாரை வேண்டுமானால் ஏமாற்றிவிடலாம்; ஆனால் அவை அனைத்தும் பொய்கள்தாம் என்பதை அவர்கள் அறிந்தே இருக்கின்றார்கள். மேலும் எவர்மீது இவர்கள் குற்றச்சாட்டுகளைச் சுமத்திக் கொண்டிருக்கின்றார்களோ அவர் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் என்பதையும் இவர்கள் உணர்ந்தே இருக்கின்றார்கள்.

அது மட்டுமின்றி எந்த மனிதருக்கு எதிராக இவர்கள் இடைவிடாமல் பொய்களையும் அவதூறுகளையும் பரப்பிக் கொண்டே இருக்கின்றார்களோ அவர் அவற்றுக்குப் பதில் தருகின்ற போது ஒருபோதும் உண்மை, நேர்மை ஆகியவற்றிலிருந்து சற்றே விலகி ஒரே ஒரு சொல் கூட மொழியாவிட்டாலும் கூட தமக்கு எதிராகக் களத்தில் இருப்பவர் வாய்மையாளர், நேர்மையாளர் என்கிற யதார்த்தத்தை இவர்கள் உணராமல் இல்லை. அதன் பிறகும்கூட தம்முடைய இந்தக் கேவலமான செயல்கள், வண்டவாளங்கள் குறித்து இவர்களுக்கு இம்மியளவுகூட வெட்கமோ, ரோஷமோ வரவில்லை எனில், சத்தியத்துக்கு எதிராகத் தொடர்ந்து பொய்யுரைத்துக் கொண்டே இருக்கின்றார்கள் எனில், இவர்களின் இந்த நடத்தையே அல்லாஹ்வின் சாபம் இவர்கள் மீது ஒட்டிக் கொண்டிருக்கின்றது என்பதற்கும் நன்மையையும் தீமையையும் பிரித்தறிகின்ற திறனோ முதிர்ச்சியோ இவர்களிடம் எஞ்சி இருக்கவில்லை என்பதற்கும் சான்றளிக்கின்றது.

இந்த இடத்தில் நல்ல முறையில் விளங்கிக் கொள்ள வேண்டிய இரண்டாவது விஷயம் என்னவெனில் நபிகளாருக்கு இந்த விவகாரத்தின் உண்மைநிலையைப் புரிய வைப்பதுதான் இறைவனின் நோக்கமாக இருந்ததெனில் அவன் தன்னுடைய தூதருக்கு மட்டுமே இரகசியமான முறையில் இதனை விளங்க வைத்திருக்கலாம். வஹி மூலமாக வெளிப்படையாக பொது அறிவிப்பு செய்து அதனைக் குறிப்பிட வேண்டிய தேவையே இருந்திருக்காது.

‘நீங்கள் எந்தத் தலைவர்களுக்கும் வழிகாட்டிகளுக்கும் பின்னால் கண்களை மூடிக் கொண்டு அலைந்து கொண்டிருக்கின்றீர்களோ, அவர்கள் எந்த அளவுக்கு வழிகெட்டுப் போய் கிடக்கின்றார்கள்’ என்பதைச் சுட்டிக் காட்டி சாமான்யர்களை எச்சரிப்பதற்காகவும் ‘அவர்களின் கேடுகெட்ட, நடத்தை கெட்ட செயல்பாடுகளே அவர்கள் மீது இறைவனின் சாபமும் சீற்றமும் விழுந்திருப்பதை வெளிப்படுத்துகின்றன’ என்பதை பொது மக்களுக்கு உணர்த்துவதற்காகவும்தாம் குர்ஆனில் இந்த விவரங்கள் எடுத்துரைக்கப்பட்டு ஒட்டுமொத்த உலகத்தாருக்கும் எல்லாமே உணர்த்தப்பட்டிருக்கின்றது.

18. இந்த வாசகத்தில், ‘ஒரு நேரம் வரும். அப்போது இவர்களின் தீய செயல்களுக்காக இவர்களை அல்லாஹ் தண்டிப்பான்’ என்கிற எச்சரிக்கை தாமாகவே பொதிந்துள்ளது. ஒரு குற்றவாளியைக் குறித்து, ‘அவனுடைய வண்டவாளங்கள் அனைத்தையும் நான் நல்ல முறையில் அறிந்து வைத்துள்ளேன்’ என்று ஆட்சியாளர் ஒருவர் சொல்கின்றார் எனில் அவர் அந்தக் குற்றவாளியின் குற்றச் செயல்கள் அனைத்தையும் அறிந்திருக்கின்றார் என்கிற பொருளைத் தருவதோடு, அதனையும் தாண்டி, ‘அவனை ஒரு கை பார்த்தே தீர்வேன்’ என்கிற எச்சரிக்கையும் அதில் பொதிந்து இருக்கின்றது.

(தொடரும்)

நேர்மையான கதையாடலை உருவாக்க வேண்டும்

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் தலைவர்
சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனியை
RSS நூற்றாண்டையொட்டி தஅவத் இதழுக்காக
டாக்டர் ஃபஹீமுத்தீன் நிகழ்த்திய நேர்காணலின் தொடர்ச்சி

தமிழில் : Dr. கலீலுர் ரஹ்மான் MBBS., MS.,

- **RSS சில சமயம் முஸ்லிம்களுடன் தொடர்பாடல் குறித்துப் பேசுகிறது கலந்துரையாடல் செய்ய எத்தனிக்கிறது. இந்த முயற்சிகளில் உண்மையுள்ளதா? இரண்டு தரப்பிலும் கலந்துரையாடலின் தேவையை உணர்ந்திருந்தாலும் தனியாகவோ கூட்டமைப்பாகவோ அர்த்தமுள்ள பயன் தரக்கூடிய கலந்துரையாடல் நடக்கவில்லை. இதன் காரணங்கள் என்ன? தற்போது இந்தக் கலந்துரையாடல் எப்படி எவ்வாறு நடைபெற வேண்டும்?**

இதுவரை ஊக்கம் தருவதாக இல்லை. அது திறந்த மனதுடனும் உண்மையுடனும் வாய்மையுடனும் நடத்தப்படும் உரையாடலாக இல்லை. உண்மையில் உலகத்திற்கு காண்பிப்பதற்காகச் செய்யப்படுகிறது. நிலைப்பாடு பற்றியும் சூழ்நிலைகளைப் பற்றியும் ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றம் நடைபெறுவதற்குப் பதிலாக தங்கள் பிம்பத்தை மேம்படுத்துவதற்கு முனைப்பு காட்டப்படுகிறது. அர்த்தமுள்ள பேச்சுவார்த்தை நடைபெற ஓர் அறச்சீர்மை வேண்டும். அதாவது மற்றவர்கள் எப்படிச் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ நாமும் அவ்வாறே செயல்பட வேண்டும். தினமும் வெறுப்புப் பேச்சுகள் பேசப்படுகின்றன. அவர்கள் மௌனமாக இருக்கின்றார்கள். அரசு அடக்கு முறையில் பங்கெடுக்கின்றார்கள். காழ்ப்பு உணர்வு ஏற்படுத்தும் செயல்பாடுகளையும் பரப்புரைகளையும் ஊக்குவிப்பதைத் தொடர்கின்றார்கள். இதன் பின் முஸ்லிம்களுக்கு நன்நடத்தை அறிவுரைகளையும் வாரி வழங்குவது என்பதை நேர்மையான பேச்சுவார்த்தை என்று சொல்ல முடியாது.

இப்போது நடப்பதை என்னவென்று சொல்ல முடியுமென்றால் மக்களை அடங்கிப் போகச் செய்வதற்கான பரப்புரை எனலாம். முஸ்லிம்கள் ஏதும் சொல்லக்கூடாது செவியேற்க வேண்டும் கீழ்ப்படிய வேண்டும் என்பதே அவர்கள் எண்ணம். இது இருதரப்பு கலந்துரையாடல் அல்ல பெரும்பான்மை பலத்தோடு செய்யப்படும் தனி ஆவர்த்தனம். பேச்சுவார்த்தை அல்ல ஆணை. கலந்துரையாடலும் பேச்சு வார்த்தையும் நடக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் உலகம் தழுவிய உண்மையும் நீதியும் மிக்க விழுமியங்களின் உறுதியானதும் அசைந்து கொடுக்காததுமான ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடக்க வேண்டும். இந்த அடிப்படையில் நடந்தால்தான் பேச்சுவார்த்தையில் முன்னேற முடியும். இது இல்லாமல் பேச்சு வார்த்தையின் எந்த நிரலையும் அமைக்க முடியாது. எந்த அர்த்தமுள்ள தீர்வையோ முடிவையோ எட்ட முடியாது.

இத்தகைய பேச்சுவார்த்தைக்கு RSS எப்போது தயாராகும் என்று கூறுவதே கடினம். உண்மையில் கலந்துரையாடல் என்பது பரந்த சமூகத்தை உட்படுத்தியதாக இருக்க வேண்டும். இன்னும் அதற்கான வாய்ப்புகள் நிரம்ப உள்ளன. சங்பரிவாரங்களின் சூழல் அமைப்பிலும் அத்தகைய கூறுகள் உள்ளவர்களைக் காணலாம். அவர்களோடு கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்கின்றன. ஆனால் அளவோடு

நிகழ்கின்றன. அதில் முன்னேற்றம் காண வேண்டும். அதற்கான முயற்சிகள் மேற்கொள் ளப்பட வேண்டும்.

- **அவசர நிலை காலத்தின் போது ஜமா அத்தே இஸ்லாமிக்கு RSSஸோடு தொடர் பிருந்தது. அதன் பின் அது தொடரப்பட வில்லை. அது அலட்சியத்தாலா அல் லது அவர்களது விருப்பமின்மையா அல் லது அதன் பின் வந்த சூழ்நிலைகள் பேச்சுவார்த்தைகளை தேவையற்றதாக ஆக்கிவிட்டதா?**

இதற்கான பதில் முன்னுள்ள பதிலில் உள்ளன. அவசர நிலை பிரகடனத்தின்போது ஆரோக்கியமான பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழல் நிலவியது. சிறையில் இரண்டு இயக் கங்களும் எதேச்சதிகாரத்திற்கும் அடக்கு முறைக்கும் எதிராக ஒன்றாகக் குரல் கொடுத் தன. சிறையில் இருந்து வெளி வந்ததும் பாதைகள் வேறுபட்டன. RSSகாரர்கள் அவசர நிலை பிரகடனத்தால் பாதிக்கப்பட்டவர் என் கிற துருப்புச் சீட்டை அதிகார ஏணியில் ஏற பயன்படுத்தினர். சிறையில் இருந்தபோது எந்த எதேச்சதிகாரத்தையும் அடக்குமுறையையும் ஒன்றுபட்டு எதிர்த்தார்களோ அதுவே அவர் களது அடையாளமாக ஆகிப்போனது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் எப்போதும் எல்லா தரப்பினருடனான நெறிமுறையோடு கூடிய அர்த்தமுள்ள பேச்சுவார்த்தை வேண் டும் என்றே வாதிட்டு இருக்கிறது. அதற்காக தொடர்ந்து செயல்பட்டிருக்கிறது. ஆனால் அதிகாரம் ராஷ்ட்ரிய சுயம் சேவக் சங்கத்தின் சித்தாந்தத்திற்கும் தார்மிக நம்பகத் தன்மைக் கும் பெருங்கேடு விளைவித்துவிட்டது. சங்பரிவார் குறித்து நாட்டில் பல்வேறுபட்ட பார்வைகள் உண்டு. கடந்த பத்தாண்டுகளில் சங்பரிவாரிடமிருந்து நம்பிக்கையுடன் நன்மையை எதிர்பார்த்திருந்தவர்கள் கூட ஏமாற்றமடைந்துள்ளனர். சங்பரிவார் குறித்து மிக மோசமான அச்சங்கள் உறுதிப்பட்டு உள்ளன.

தற்போதைய அரசாங்கங்கள் பின்பற்றும் கொள்கைகளைக் கருத்தில் கொண்டு பாகு படுத்தலை இயல்பாக்குதலையும் தனிமைப் படுத்தலையும் வெறுப்பையும் பெருமைக் குரிய கொள்கைக் கூறுகளாய்க் கொண்டு வெட்கக்கேடான நெறிமுறையற்ற செயல் பாடுகளுக்கு சங்பரிவார் உடந்தையாய் இருக்கும் சூழலிலும் அவர்களோடு பேச்சு வார்த்தை மேற்கொள்வது கடினம்.

அவர்களிடம் கொஞ்சமேனும் மன சாட்சி எழுச்சி பெறும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம். அவர்களுடைய அதிகார போதை இறங்கும் என எதிர்பார்க்கிறோம். அவர்களது பூரண ஆதிக்கம் செலுத்த நினைக் கிற உக்கிரமான எதேச்சதிகார வெறி மட்டுப் படும் என எதிர்பார்க்கிறோம். அவ்வாறு நடந்தால் அவர்களுடனான ஆரோக்கியமான பேச்சுவார்த்தை சாத்தியப்படலாம்.

- **சங்பரிவார் தன்னை பரந்த மனப்பான்மை கொண்ட அனைவரையும் உள்ளடக்கிய எல்லா பிரிவினரையும் ஒன்று சேர்த்து வலு வாய்ந்த அமைப்பாக இந்தியாவை மதிப்புமிக்க நாடாக்குவதற்குப் பாடு படும் அமைப்பாகவே முன்னிறுத்துகிறது. இந்த நல்ல இலட்சியங்களை யாரால் மறுக்க முடியும்? முஸ்லிம்களை தேசிய மைய நீரோட்டத்திற்கு உட்படுத்தப் போவதாகச் சொல்லும் அதே நேரத்தில் நடைமுறையில் முஸ்லிம்களின் அடை யாளத்தையும் நிறுவனங்களையும் அரசியல் குரலையும் அது நசுக்குகிறது. இந்த முரண்பாட்டை எப்படிப் பார்க் கின்றீர்கள்?**

இது சங்பரிவாரின் சிந்தனை முறைமை யோடு மிக ஆழமான தொடர்புடைய ஒன்று. நான் முன்பே கூறியது போல அவர்களது மிகப் பெரிய கவலை முஸ்லிம்களின் சித்தாந்த நாகரிக அடையாளங்கள்தான். அவர்கள் ஒற்றுமை நல்லிணக்கத்தின் முழக்கங்களை எழுப்புவார்கள். ஆனால் அவர்களது நல்லி ணக்கத்தைப் பற்றிய பார்வை எப்படிப்பட்ட தென்றால் பல்வேறுபட்ட இன, கலாச்சார, நாகரிக, மொழி வேறுபாடுகளை ஒழித்துக் கட்டி ஒரே தேசிய இனமாக ஒரே கலாச் சாரம் கொண்டவர்களாக ஒரே சித்தாந்த

நாகரிகமுடையவர்களாக ஒரே மொழி பேசு பவர்களாக மாற்றி ஒன்றுபடுத்துவதுதான்.

முஸ்லிம்களை அவர்கள் மைய நீரோட் டத்திற்கு அழைக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்கிற மைய நீரோட்டம் என்னவென் றால் முஸ்லிம்களின் வரலாறு குற்றமாகவும் முஸ்லிம்களின் அடையாளம் வெறுப்புக் குரியதாகவும் முஸ்லிம்களின் நிறுவனங்கள் வெறும் பாரமாகவும் கருதப்படுகிற கலாச் சாரச் சூழல். அவர்கள் சொல்கிற ஒற்றுமை யின் பொருள் எல்லா நாகரிகப் பிரிவுகளும் உட்கொள்ளப்பட்டு அவர்கள் பெரும்பான்மை கலாச்சாரம் என்று சொல்கிற ஒன்றில் கலந்து செரிமானம் ஆகிவிட வேண்டும் என்பதே.

இந்து நாகரிகம் என்று அவர்கள் சொல் கிற ஒன்று மட்டுமே இருக்க வேண்டும் என் கிறார்கள். தெளிவாக முஸ்லிம்கள் இதனை ஏற்க முடியாது. பிணக்கிற்கான மூல வேரே இதுதான். இந்தியா போன்ற ஒரு நாட்டில் ஒற்றுமையினதும் நல்லிணக்கத்தினதும் இரகசியம் வேற்றுமையிலும் ஒற்றுமையை மதிப்பதில் இருக்கிறது. கலாச்சார வேற்றுமை களை மதிப்போடும் மரியாதையோடும் ஏற்று பேணிப் பராமரிப்பதில் உள்ளது. சங்பரிவார் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். சங்பரி வார் இதனைப் புரிந்துகொள்கிறதோ இல் லையோ இந்திய நாட்டு மக்கள் அனைவரை யும் இதனைப் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

- **முஸ்லிம்கள் அரசாலும் சமூக அளவிலும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இந்நிலையில் முஸ்லிம்கள் தங்கள் எதிர் காலச் செயல்பாட்டை எத்திசையில் கொண்டு செல்வது? இந்திய முஸ் லிம்கள் இதுவரை பரந்த மனப்பான்மை கொண்ட ஜனநாயக அரசமைப்புச் சட்டத் தின் பாதுகாப்பு போதுமானது என்ற நம்பிக் கையில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் அவ்வப்போது எதிர்கொள்கிற பிரச்னை களை மையப்படுத்தி எதிர்வினை ஆற்று கிறார்கள். இப்போது அரசமைப்புச் சட்ட மும் அதன் ஆன்மாவும் சிதைக்கப்படுகிற சூழலில் முஸ்லிம்கள் தங்கள் அடை யாளமும் இருப்பும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதாக உணர்கிறார்கள். இந்தியாவில் முஸ்லிம் சமூகம் தங்கள் இஸ்லாமிய அடையாளத்தின் புதிய கதை யாடலை வளர்த்தெடுக்க வேண்டுமா?**

ஆம். கதையாடலில் மட்டுமல்ல ஒட்டு மொத்த நடத்தை முறையிலும் மாற்றம் தேவை. இந்த நிலைமைகள் திடமான அக மாற்றங்களுக்கு அடிப்படையாக அமைய வேண்டும். ஒரு சமூகத்தின் இருப்பு சவாலுக்கு உள்ளாகும் போதுதான் மறு மலர்ச்சி தோன்ற ஆரம்பிக்கிறது என கூட்டு மனவியல் தத்துவம் சொல்கிறது. இந்திய முஸ்லிம்களுக்கு மறுமலர்ச்சிக்கான சூழ் நிலையும் தளமும் இயற்கையாகவே தற் போது மலர்ந்துள்ளது. மறுமலர்ச்சியின் விதை களைத் தூவ வேண்டியது அவர்களின் பொறுப்பாகும். நான் இளைஞர்களுக்கு எப் போதும் கொடுக்கும் முழக்கம் ‘மீள்தன்மை யின் மூலம் மறுமலர்ச்சி’. நமது கூட்டு மனப்பான்மையுடன் மையக்கருத்தாக தற் போது இருக்க வேண்டியது இதுதான். தற் காலிக பிரச்னைகளுக்கு எதிர்வினை ஆற்று வதை விடுத்து நீண்ட கால மாற்றத்தைக் காண பாடுபட வேண்டும். புனர் நிர்மாணத்தையும் அறிவைத் தகவமைப்பதையும் குறிக்கோளா கக் கொண்டு ஆரவாரமற்ற தீவிரமான தொடர் போராட்டத்தைக் கைக்கொள்வதோடு சரியான வாய்ப்புகளுக்காவும் விழிப்பாகக் காத்திருக்க வேண்டும். இதுவே நமது செயல் பாட்டுப் பாதையின் சுருக்கமாகும்.

RSS சன்னம் சன்னமாக இந்துத்துவ அடிப்படையிலான முழு சமூக மாற்றத்தைக் கொண்டு வரும் என்ற கவலை இருந்தது. அப்படிச் செய்திருந்தால் மிகப்பெரும் சவா லாக அது அமைந்திருக்கும். ஆனால் அவர் களது வரலாற்றின் முக்கியமானதும் தீர்க்க மானதுமான கால கட்டத்தில் புயல் வேகத் தில் அனைத்துத் துறைகளையும் நிறுவனங் களையும் கையகப்படுத்துவதைத் தேர்ந் தெடுத்துக் கொண்டார்கள்.

புயல்கள் வரும். பேரழிவுகளை ஏற்படுத்தும். சீக்கிரத்தில் கடந்து போகும். இந்தப் புயலும் வந்த வேகத்தில் கடந்து போகும். அது தணிந்த பிறகு இந்தியா பெரும் சீரமைப்புக்கு உள்ளாகும். அந்தக் கட்டத்திற்கு தயாராவதில் நம் கவனம் குவிந்திருக்க வேண்டும். தற்போதைய சூழலில் நம் முன் உள்ள வழிகள் குறைவு. சாத்தியமான வழிகளில் அக்கிரமங்களையும் அநீதிகளையும் எதிர்க்கவும் தடுக்கவும் வேண்டும். ஆனால் RSSக்குப் பிந்தைய இந்தியாவில் நாம் முக்கியப் பங்கு பெறுவதிலும் ஊக்கத்தோடு செயல்படுவதற்கும் தயாராக வேண்டும்.

இந்த நோக்கத்திற்காக இடைவிடாமல் நிலையாக மூன்று ஆக்கப்பூர்வமான பணிகளில் முஸ்லிம்கள் ஈடுபட வேண்டும் என எப்போதும் நான் கூறிவருகிறேன். முதலில் நேர்மையான சரியான கதையாடலை உருவாக்குவது. இரண்டாவது கூட்டணிகளை கட்டமைப்பது. மூன்றாவது நிறுவனங்களை நிர்மாணிப்பது.

- **உபதேசிப்பதற்கும் பரப்புரை செய்வதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்போது இறை செய்தியையும் இறைத்தூதரின் வாழ்க்கையையும் நாடு முழுக்கக் கொண்டு சேர்ப்பதற்கு என்ன உத்தியை கைக் கொள்வது?**

பரப்புரையைக் கட்டுப்படுத்தவே முடியாது. பரப்புகிற முறைமைகளிலும் அணுகுமுறைகளிலுமே கட்டுப்பாடுகளை விதிக்க முடியும். தஃவா - பரப்புரை பல நிலைகளைக் கடக்கும் என்பது இறைவன் வகுத்துள்ள நியதி. எந்த ஓர் இடத்திலும் முஸ்லிம்களின் இருப்பும் வாழ்வுமே தஃவாதான். அழைப்பிற்கான அத்தியாவசியத் தேவை உபதேசிப்பவரிடத்தில் உயிரோட்டமுள்ள மனச்சான்றும் உணர்வுள்ள இதயமுமே. பேச்சுரிமை அல்ல. இந்த இரண்டும் இருந்தால் எவ்வளவு கடினமான சூழ்நிலை நிலவியபோதும் அழைப்பிற்கான வழிகளைக் கண்டு கொள்ளலாம்.

முஸ்லிம்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்வில் தகப்பனாக மகனாக கணவனாக தாயாக மகளாக மனைவியாக தோழனாக சக ஊழியராக முதலாளியாக பணியாளராக தோழியாக என எல்லாப் பாத்திரங்களிலும் இறைவனும் இறைத்தூதரும் காட்டித்தந்த வழியில் முன்னுதாரணமாகச் செயல் சான்றை அளித்தால் அது அழைப்புப்பணியாக அமையும். அது போலவே நம் குடும்பம் சமூக பழக்க வழக்கங்கள் உறவுகள் அமைப்புகள் நிறுவனங்கள் என அனைத்தும் இறைவழிகாட்டுதலின்படி இஸ்லாமிய விழுமியங்களைக் கடைப்பிடித்து முன்மாதிரியாக இருந்தால் அதுவே அழைப்பாக அமையும்.

முஸ்லிம்கள் தங்களுடைய தனித்துவமான பண்பாடுகளால் இஸ்லாத்தின் செயல் சான்றை வழங்க வேண்டும். அவர்கள் மனித குலத்திற்கு அருட்கொடையாக வெளிப்பட வேண்டும். நாட்டின் வளர்ச்சிக்கும் நிலைத்த நீதிக்கும் பாடுபடுவதில் முன்னிற்பவர்களாகத் திகழ வேண்டும். இஸ்லாத்தின் போதனைகள் அடிப்படையில் இதற்கான செயல் திட்டத்திற்குப் பணி நிரலுக்குத் தலைமை ஏற்று ஊக்கத்தோடு செயல்பட வேண்டும். இந்த வழிமுறைகளில் எல்லாம் இஸ்லாத்தின் செய்தி தெளிவாக வெளிப்படும். மைக் (microphones) பறிக்கப்பட்டாலும் நம் வாழ்வும் இருப்பும் ஒலிபெருக்கியாகி விடும் (loudspeaker).

இரண்டு அடிப்படைத் தேவைகள் உள்ளன. ஒன்று, முஸ்லிம்கள் தங்கள் தனிப்பட்ட நடத்தையிலும் கூட்டு இயங்குமுறையிலும் வாய்மையாக இஸ்லாத்தின் போதனைகளை பிரதிபலிக்க வேண்டும். முஸ்லிம்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளாமல் பொதுச் சமூகத்தோடு தொடர்பாடலில் இருக்க வேண்டும். அந்தத் தொடர்பாடலில் நம் சொல்லாலும் செயலாலும் மக்கள் இஸ்லாத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமே தவிர ஊடகங்களின் கதையாடல்களால் அல்ல. திடமானதும் நல்ல விளைவுகளைத் தரக்கூடிய விடாமுயற்சியும் மேற்சொன்ன இரண்டு விஷயங்களிலும் தேவை.

(தொடரும்)

இறுதி மொகலாய மன்னர்

பகதூர் ஷா

● சேயன் இப்ராகிம்

சில வரலாற்று ஆசிரியர்களால் அவதூறு செய்யப்பட்ட மொகலாயப் பேரரசின் மன்னர்களான பாபர், ஔரங்கஜேப் குறித்து முந்தைய இதழ்களில் பார்த்தோம். அனைத்து வரலாற்று ஆசிரியர்களாலும் புகழப்பட்ட மொகலாய மன்னர் இரண்டாம் பகதூர் ஷா குறித்து இந்த இதழில் பார்க்கலாம்.

மன்னர் ஔரங்கஜேப் ஆட்சிக்குப் பின்னர் மொகலாயப் பேரரசு படிப்படியாக வலுவிழந்தது. அவருக்குப் பின்னர் கீழ்க் கண்ட மன்னர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர்.

பகதூர் ஷா : 1707-1711

ஜஹான்தார் ஷா : 1712-1713

ஃபரூக் ஸியா : 1713-1719

ரஃபியுத் தர்ஜாத் : 1719

ரஃபியுத் தௌலா : 1719

முஹம்மது ஷா : 1719-1748

அஹ்மது ஷா : 1748-1756

இரண்டாம் ஆலம்கீர் : 1756-1759

இரண்டாம் ஷாஹ் ஆலம் : 1759-1805

இரண்டாம் அக்பர் : 1806-1837

இரண்டாம் பகதூர் ஷா : 1838-1858

151 ஆண்டுகள் காலகட்டத்தில் 11 மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர்.

இரண்டாம் பகதூர் ஷா ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது பேரரசின் பெரும்பாலான பகுதிகள் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின் கீழ் போய்விட டெல்லி நகரை உள்ளடக்கிய ஒரு சிறு பகுதியே இரண்டாம் பகதூர் ஷாவின் ஆட்சியின் கீழ் இருந்தது.

அவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது டெல்லியிலுள்ள அரசுக்குச் சொந்தமான நிலம், வீடுகளிலிருந்து வாடகை வசூலிக்கும் உரிமை மட்டுமே அவருக்கு இருந்தது. மேலும் ஆங்கிலேயக் கம்பெனி அரசு அவருக்கு மாதந்தோறும் ஒரு லட்சம் ரூபாய் மானியம் வழங்கியது. மன்னர் செங்கோட்டையில் வசித்து வந்தார்.

இந்நிலையில் மன்னரை செங்கோட்டையிலிருந்து வெளியேற்ற எண்ணிய வைஸ்ராய் டல்ஹௌசி பிரபு ‘செங்கோட்டையை விட்டு வெளியேறிச் சென்றால் மாதந்திர மானியத் தொகையை உயர்த்தித் தருகிறேன்’ என்று கூறினார். தனது முன்னோர்கள் கட்டிய கோட்டையிலிருந்து வெளியேறி, வைஸ்ராய் கூறிய குதுப் மாளிகையில் குடியேற மன்னர் விரும்பவில்லை. இதனால் கம்பெனி ஆட்சியினர் மன்னர் மீது அதிருப்தியும் கோபமும் கொண்டனர்.

இந்நிலையில் 1857ஆம் ஆண்டு சிப்பாய்களும், சிற்றரசர்களும், நவாபுகளும் இணைந்து ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக ஆயுதம் தாங்கிய பெரும் கிளர்ச்சி நடத்தினர். இதுவே வரலாற்றில் சிப்பாய்க் கலகம் என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கிளர்ச்சியில் வெற்றி பெற்று ஆங்கிலேயர்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினால் மன்னர் பகதூர் ஷாவையே இந்தியாவின் மன்னராக அமர்த்துவோம் என கிளர்ச்சியை நடத்திய தலைவர்கள் அறிவித்தனர். மன்னர் பகதூர் ஷாவும் அதனை ஏற்றுக்கொண்டு கிளர்ச்சியாளர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்தார்.

10.5.1857 அன்று மீரட்டிலிருந்து சிப்பாய்கள் கிளர்ச்சியைத் தொடங்கினர்.

அதனைத் தொடர்ந்து மத்திய மாகாணத்திலிருந்த பல்வேறு இடங்களிலும் சிப்பாய்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். மீரட் நகரில் கிளர்ச்சியைத் தொடங்கிய சிப்பாய் பிரிவினர் ஆங்கிலேயப் படையினரைத் தோற்கடித்து டெல்லி நகரைக் கைப்பற்றினர். டெல்லி செங்கோட்டையில் இந்திய சுதந்திரக் கொடியை ஏற்றினர். ஏற்கனவே அறிவித்தபடி மன்னர் பகதூர் ஷாவை இந்தியாவின் மன்னராக அறிவித்தனர். மன்னரும் புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்டு ஆட்சி புரியலானார். இந்து முஸ்லிம்களின் நல்லிணக்கத்திற்காகப் பல புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

ஹஜ் பண்டிகையின் போது பசுக்களை அறுக்கக் கூடாது என முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தினார். மன்னரின் வேண்டுகோளை ஏற்று முஸ்லிம்கள் பண்டிகையின் போது பசுக்களை அறுக்கவில்லை. எனினும் டெல்லியில் இருந்த கிளர்ச்சியாளர்கள் சிலர் அத்துமீறிய நடவடிக்கைகளில் ஈடு

பட்டனர். மன்னரால் இவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தன்னிடம் அடைக்கலம் தேடி வந்த 50க்கும் மேற்பட்ட ஆங்கிலேய அதிகாரிகளின் குடும்பத்தினருக்கு மன்னர் பாதுகாப்பு அளித்து வந்தார். ஆனால் கிளர்ச்சியாளர்கள் மன்னரின் அறிவுறுத்தலை மீறி அந்த ஆங்கிலேயர்களைக் கொன்று குவித்தனர். கிளர்ச்சியாளர்களின் இந்தக் கொடூரச் செயல் கண்டு செய்வதறியாது மன்னர் திகைத்து நின்றார். தங்களிடம் வாக்குறுதி அளித்த மன்னரால் தங்களது குடும்பத்தினரைக் காப்பாற்ற முடியவில்லையே எனக் கருதிய ஆங்கிலேய அதிகாரிகள் மன்னர் மீது கடும் கோபம் கொண்டனர்.

கிளர்ச்சியாளர்களை எப்படியும் ஒடுக்கியே தீர வேண்டும் என்று திட்டம் தீட்டிய ஆங்கிலேய கம்பெனி ஆட்சியினர், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் படைவீரர்களை டெல்லிக்குக் கொண்டு வந்தனர். ஆங்கிலேயத் தளபதி ஜெனரல் ஹட்சன் தலைமையிலான இப்படைப் பிரிவினர் கிளர்ச்சியாளர்களுடன் போரிட்டு அவர்களைத் தோற்கடித்தனர். ஆயிரக்கணக்கான கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். மன்னர் பகதூர் ஷா செங்கோட்டையை விட்டு தனது குடும்பத்துடன் வெளியேறி ஹுமாயூன் சமாதிக்குச் சென்று அங்கே பதுங்கிக் கொண்டார்.

ஆங்கிலேயத் தளபதி ஜெனரல் ஹட்சன் ஐம்பது போர் வீரர்களுடன் ஹுமாயூன் சமாதிக்குச் சென்று மன்னரையும் குடும்பத்தினரையும் சரணடையுமாறு உத்தரவிட்டார். மன்னர் வெளியே வந்தார். அவரையும், மகாராணி ஜீனத் மகலையும், மகன் ஜவான் பக்த் ஆகியோரையும் பல்லக்கில் ஏற்றினார். மகன்கள் மிர்ஸா மொகலையும், மிர்ஸா கிஸார் சுல்தானையும் ஒரு மாட்டு வண்டியில் ஏற்றினார். பல்லக்கும் மாட்டு வண்டியும் செங்கோட்டைக்கு அனுப்பப்பட்டன. செல்கின்ற போது ஜெனரல் ஹட்சன் மாட்டு வண்டியில் இருந்த மன்னரின் இரு மகன்களையும் சுட்டுக் கொன்றான். பகதூர் ஷாவும், மகாராணியும், மகன் ஜவான் பக்தும் செங்கோட்டையில் சிறை வைக்கப் பட்டனர்.

ஆங்கிலேயக் கம்பெனி ஆட்சியாளர்களிடமிருந்து மாதாந்திர உபகாரச் சம்பளம் பெற்றுக் கொண்டு ஆட்சிக்கு எதிராகக் கலகம் செய்ததாகவும், தானே இந்தியாவின் பாதுஷா எனப் பிரகடனப்படுத்தியதாகவும், சிப்பாய்களுடன் சேர்ந்து கொண்டு அரசுக்கு

எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டதாகவும், 50 ஆங்கிலேயர்களைப் பாதுகாக்கத் தவறியதற் காகவும், தனது ஆட்சியை நிலை நிறுத்திக் கொள்ள முஸ்லிம் ஆட்சியாளர்களின் ஆதர வைக் கோரியதாகவும் அவர் மீது குற்றம் சாட் டப்பட்டது. டெல்லி செங்கோட்டையிலேயே அவர் மீது ஆங்கிலேய நீதிபதிகள் விசா ரணை நடத்தினர். குற்றச்சாட்டுகள் நிரூபிக் கப்பட்டதாகக் கூறி அவருக்கு ஆயுள் தண் டனை விதித்தனர். 9.3.1858 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஏழு மாதம் மன்னரையும் அவரது குடும் பத்தினரையும் டெல்லி செங்கோட்டை யிலேயே சிறை வைத்த ஆங்கிலேய ஆட்சி யினர் 7.10.1858 அன்று அவர்களைக் கப்பல் மூலமாக பர்மாவின் தலைநகரான ரங்கூனுக்குக் கொண்டு சென்று வீட்டுச் சிறையில் வைத்தனர். மன்னர் பகதூர் ஷா, மகாராணி ஜீனத் மகல், மகன் ஜவான் பக்த், அவரது மனைவி ஜமானி பேகம், முபாரக் நிஸா என்ற இன்னொரு மனைவிக்குப் பிறந்த மிர்ஸா ஷா அப்பாஸ், அரசவை ஊழியர்கள் உட்பட 31 பேர் கைதிகளாக ரங்கூனுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

வீட்டுச் சிறையிலிருந்த மன்னருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் நாளொன்றுக்கு 16 ரூபாய் மட்டுமே உணவுச் செலவுக்காக வழங்கப்பட்டது. மன்னரைப் பார்ப்பதற்கு யாருக்கும் அனுமதி வழங்கப் படவில்லை. மிகவும் ஏக்கத்திலேயே வாழ் நாள்களைக் கழித்து வந்த மன்னர் 7.11.1862 இல் மரணமடைந்தார். அவரது ஜனாஸா அன்றே டாகன் பகோடா மலையடிவாரத்தில் அடக்கம் செய்யப்பட்டது. அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் எந்த ஒரு சிறு நினைவுச் சின்னமும் வைக்கப்படவில்லை. எனவே அவரது அடக்கத்தலம் வெகு சீக்கிரத்திலேயே இருந்த இடம் தெரியாமல் அழிந்து விட்டது.

1907ஆம் ஆண்டு பர்மா மக்கள் அவரது நினைவிடத்தைத் தேடிக் கண்டுபிடித்து அங்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பினர். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பர்மாவில் இருந்த போது மன்னர் பகதூர் ஷாவின் கல்லறைக்குச் சென்று அஞ்சலி செலுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

மகாராணி ஜீனத் மகல் 17.7.1886 அன்று மரணமடைந்தார். அவரது ஜனாஸா அவரது கணவரான மன்னர் பகதூர் ஷாவின் கல்லறைக்கு அருகிலேயே அடக்கம் செய் யப்பட்டது. மன்னரின் குடும்ப வாரிசுகள் இன்றைக்கு பர்மாவில் வாழ்ந்து கொண்டிருக் கக்கூடும் என நம்பப்படுகிறது.

மன்னர் பகதூர் ஷா ஒரு மிகச் சிறந்த கவிஞராகத் திகழ்ந்தார். இஸ்லாமியக் கடமை களைப் பழுதின்றி நிறைவேற்றி வந்தார். எந்த விதமான ஆடம்பரமுமின்றி மிக எளிமையாக வாழ்ந்தார். மொகலாயப் பேரரசின் இறுதி மன்னரான அவர் ஒரு தியாக வாழ்க்கையை வாழ்ந்து விட்டுச் சென்றார்.

ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர் வில்லி யம் டேல்ரிம்பிள் எழுதியுள்ள கடைசி முகலாயன் என்ற நூலில் பகதூர் ஷா குறித்துக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார். 'எல்லா வற்றுக்கும் மேலாக இந்துக்களின் பாதுகாவ லர் முஸ்லிம்களின் தேவைகளை நிறைவேற் றுபவர் என்ற தன்னுடைய பாத்திரத்திற்கு மன்னர் எப்போதும் பெரும் முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளார். இந்து முஸ்லிம் ஒற்று மையை அவர் எப்போதும் விரும்பினார். சிப்பாய்க் கலகத்தின் போது அவர் ஜிகாதிகளின் கோரிக்கைக்குச் செவி சாய்க்காமல் இந்துக் களுடன் நல்லுறவைப் பேணவே விரும்பினார்.

மொகலாயப் பேரரசர்களுள் பாபர், ஔரங் கஜேப், இரண்டாம் பகதூர் ஷா ஆகிய மூவ ரைப் பற்றி இத்தொடரில் பார்த்தோம். மன்னர் அக்பர் குறித்து பல வரலாற்று ஆசிரியர்கள் மிகச் சிறப்பாகவே எழுதி வைத்து விட்டுச் சென்றுள்ளனர். மன்னர்கள் ஜஹாங்கீர், ஷாஜ கான் குறித்து எதிர்மறையான விமர்சனங்கள் அதிகம் இல்லை என்பதையும் நாம் கவனத் தில் கொள்ள வேண்டும்.

மொகலாயர்கள் ஆக்கிரமிப்பாளர்களா? அந்நியர்களா? அடுத்த இதழில் பார்ப்போம்

- தொடரும்

செல்லப் பிராணிகள் வளர்ப்பு..!

- ஒரு பார்வை

- Dr. நியாஸ் முஹம்மது ரஃபீ B.V.Sc, AH கால்நடை மருத்துவர்

'பூமியில் இருப்பவர்களிடம் இரக்கம் காட்டுங்கள்; வானத்தில் இருப்பவன் உங்கள் மீது இரக்கம் காட்டுவான்'

இஸ்லாம் மனிதர்களுக்கு மட்டுமின்றி இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிரினங்களிடமும் இரக்கம், கருணை, பொறுப்புடன் நடந்து கொள்ளக் கற்றுத்தரும் மார்க்கமாகும். நாய், பூனை, பறவை, முயல் போன்ற பல்வேறு உயிரினங்களை மக்கள் செல்லப்பிராணிகளாக வளர்த்து வருகின்றனர். அவற்றை வளர்ப்பது குறித்த வழிகாட்டுதல்களை நாம் அறிந்து கொள்வது மிகவும் அவசியமானது.

உயிரினங்களும் இறைவனின் படைப்புகளே!

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: 'பூமியில் ஊர்ந்து செல்லும் எந்த உயிரினமும், தம் இரு இறக்கைகளால் பறக்கும் எந்தப் பறவையும் உங்களைப் போன்ற சமூகங்களே' (திருக்குர்ஆன் 6:38)

இந்த வசனம் உயிரினங்களும் அல்லாஹ்வின் படைப்புகளே என்பதையும் அவற்றுக்கும் அவற்றின் இயல்பான வாழ்க்கை முறையும் தேவைகளும் உள்ளன என்பதையும் நமக்கு நினைவூட்டுகிறது. எனவே ஒரு செல்லப்பிராணியை வளர்ப்பது வெறும் பொழுதுபோக்காக இருக்கக் கூடாது. அதை ஓர் அமானத் (பொறுப்பு) எனக் கருதி பராமரிக்க வேண்டும்.

நபி(ஸல்)அவர்கள் கற்றுத்தந்த இரக்கம்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் உயிரினங்களின் மீது இரக்கம் காட்டுவதன் சிறப்பை நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளார்கள்.

ஒரு நாய் தாகத்தால் தவித்துக் கொண்டிருந்தபோது ஒரு பெண் அதற்குத் தண்ணீர் கொடுத்தாள். அவளுடைய அந்த நற்செயலுக்காக அல்லாஹ் அவளை மன்னித்ததாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

'ஒரு நாய் தாகத்தால் கிணற்றைச் சுற்றிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட ஒரு பெண் அதற்குத் தண்ணீர் கொடுத்தாள். அவளுடைய அந்த நற்செயலுக்காக அல்லாஹ் அவளை மன்னித்தான்' (ஸஹீஹுல் புகாரி 3467)

இதிலிருந்து ஒரு முக்கியமான பாடத்தை நாம் கற்றுக்கொள்ளலாம். ஓர் உயிரினத்திற்கு நாம் செய்யும் சிறிய உதவியைக்கூட அல்லாஹ் நன்மையாகப் பதிவு செய்யக் கூடும். அதே நேரத்தில் உயிரினங்களைப் பராமரிப்பதில் அலட்சியம் காட்டுவதின் ஆபத்தையும் நபி(ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

ஒரு பெண் பூனையைக் கட்டி வைத்திருந்தாள். அதற்கு உணவும் தண்ணீரும் கொடுக்கவில்லை. அது வெளியில் சென்று உணவு தேடுவதற்கும் அனுமதிக்கவில்லை. அந்தப் பூனை இறந்தது. அந்தப் பெண் அதற்காகத் தண்டிக்கப்பட்டதாக நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.(ஸஹீஹ் முஸ்லிம் 2242, 2243)

இந்த நபிமொழி செல்லப்பிராணியை வைத்திருப்பவர்களுக்கு மிகப்பெரிய எச்சரிக்கையாகும். செல்லப்பிராணியை வாங்குவது மட்டும் போதாது; அதற்கு உணவு, தண்ணீர், பாதுகாப்பு, மருத்துவப் பராமரிப்பு, தேவை

யான அன்பை வழங்குவதும் நமது பொறுப் பாகும்.

செல்லப்பிராணியை வளர்ப்பதற்கு முன் சிந்திக்க வேண்டியவை

ஒரு விலங்கையோ, பறவையையோ வீட்டிற்கு வாங்கி வருவதற்கு முன் நாம் சில முக்கியமான கேள்விகளை நம்மிடம் கேட்டுக் கொள்ள வேண்டும்: அதற்குத் தினமும் போது மான உணவு, தண்ணீர் வழங்க முடியுமா?, அதன் உடல்நலத்தைப் பராமரிக்க முடியுமா?, நோய் ஏற்பட்டால் கால்நடை மருத்துவரிடம் அழைத்துச் செல்ல முடியுமா?, அதன் இயற் கையான தேவைகளைப் புரிந்து கொள்ள முடியுமா?, போதுமான இடமும் பாதுகாப் பான சூழலும் வழங்க முடியுமா?, அது வய தாகும்போதும் நோயுற்றபோதும் தொடர்ந்து பராமரிக்க முடியுமா?

இவற்றைச் செய்ய முடியாத நிலையில் வெறும் ஆசைக்காக ஒரு பிராணியை வீட் டிற்கு வாங்கி வருவது சரியான அணுகுமுறை அல்ல.

செல்லப்பிராணி என்பது விளையாட்டுப் பொருள் அல்ல

சிலர் செல்லப்பிராணிகளை வெறும் புகைப்படம் எடுப்பதற்காகவோ, சமூக வலை தளங்களில் பதிவிடுவதற்காகவோ வளர்க் கின்றனர். ஆனால் அது ஓர் உயிர் என் பதை நாம் மறந்து விடக்கூடாது. அதற்குப் பசி, தாகம், வலி, பயம், நோய் போன்ற உணர்வுகள் உள்ளன.

அதனால் செல்லப்பிராணியை அடிப்பது, தேவையின்றி துன்புறுத்துவது, நீண்ட நேரம் உணவு அல்லது தண்ணீர் இல்லாமல் வைப்பது, நோயுற்றபோது சிகிச்சை அளிக் காமல் இருப்பது போன்ற செயல்களை இஸ்லாம் கண்டிக்கின்றது.

தூய்மை, மார்க்க ஒழுங்குகள்

செல்லப்பிராணிகளை வளர்க்கும்போது தஹாரத் (தூய்மை) தொடர்பான இஸ்லாமிய விதிமுறைகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக நாய் தொடர்பான விஷயங் களில் அதன் உமிழ்நீர், பாத்திரங்களைப் பற்றிய ஹதீஸ்களும் ஃபிக்ஹ் அறிஞர்களின் விரிவான விளக்கங்களும் உள்ளன. எனவே தனிப்பட்ட முறையில் ஒரு முடிவை எடுப் பதை விட மார்க்க அறிஞர்களின் வழிகாட்டு தலைப் பின்பற்றுவது சிறந்தது.

அதேபோல் செல்லப்பிராணி வளர்ப்பது நமது தொழுகை, தூய்மை, குடும்பப் பொறுப்புகள், மார்க்கக் கடமைகளுக்கு இடை யூறாகாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

கால்நடை மருத்துவரின் பார்வையில்..!

ஒரு கால்நடை மருத்துவராக நான் அடிக்கடி கவனிக்கும் ஒரு விஷயம் என்ன வென்றால் பல செல்லப்பிராணிகளின் நோய்

களுக்குக் காரணம் நோய் மட்டும் அல்ல; சரியான உணவு வழங்காமை, தடுப்பூசி போடாமை, குடற்புழு நீக்கம் செய்யாமை, சுகாதாரமின்மை, மருத்துவ ஆலோசனையை தாமதப்படுத்துதல் போன்றவையும் முக்கியக் காரணங்களாக இருக்கின்றன.

செல்லப்பிராணியை வளர்ப்பவர்கள் தடுப்பூசி, குடற்புழு நீக்கம், சரியான உணவு, சுத்தமான குடிநீர், சுகாதாரம், வழக்கமான மருத்துவப் பரிசோதனை, அவசர நிலையில் உடனடிச் சிகிச்சை என்ற அடிப்படை முறை யைப் பின்பற்ற வேண்டும்.

இது ஒரு மருத்துவப் பொறுப்பு மட்டுமல்ல; நாம் ஏற்றுக்கொண்ட உயிரினத்தின் மீதான அமானத்தையும் நிறைவேற்றுவதாகும்.

இரக்கம் – ஒரு முஸ்லிமின் அடையாளம்

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘இரக்கம் காட்டாதவர் இரக்கம் காட்டப்படமாட்டார்.’

மனிதர்களிடம் மட்டுமல்லாமல், நம்மைச் சுற்றியுள்ள உயிரினங்களிடமும் இரக்கம் காட்டுவது நமது ஈமானியப் பண்புகளில் ஒன்றாகும்.

ஒரு பறவைக்குத் தண்ணீர் வைப்பது, வெயில் காலத்தில் தெரு விலங்குகளுக்குக் குடிநீர் வழங்குவது, பசியுடன் இருக்கும் ஓர் உயிரினத்திற்கு உணவு கொடுப்பது போன்ற சிறிய செயல்கள்கூட அல்லாஹ்விடம் நன்மையாக அமையலாம்.

செல்லப்பிராணியை வளர்ப்பது உரிமை மட்டுமல்ல; பொறுப்பும் ஆகும். அல்லாஹ்

நமக்கு வழங்கிய உயிரினங்களை அன்புடன் பராமரிப்போம். அவற்றைத் துன்புறுத்தாமல் அவற்றின் தேவைகளைப் புரிந்து மருத்துவ ரீதியாகவும் மார்க்க ரீதியாகவும் சரியான முறையில் கவனிப்போம்.

நாம் ஓர் உயிரினத்தின் மீது காட்டும் இரக்கம், நமது உள்ளத்தின் இரக்கத்தை வெளிப்படுத்துகிறது. ‘அல்லாஹ்வின் படைப்புகளுக்கு இரக்கம் காட்டுவோம்; அல்லாஹ்வின் இரக்கத்தைப் பெறுவோம்’

HIJAZ
LEATHERS PVT. LTD.,
Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

பேச்சு..!

- மௌலானா முஹம்மத் ஃபாரூக் கான்

தமிழில் : டி. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

பேச்சுக்கும் உரையாடலுக்கும் மனித வாழ்வில் அடிப் படையான முக்கியத்துவம் உண்டு. ஒருவர் எப்படிப்பட்டவர் என்பதை அவருடைய பேச்சே வெளிப்படுத்திவிடும். தூய்மையான இயல்பைக் கொண்ட மனிதர்களின் பேச்சில் தூய்மை மிளிரும். வழிகெட்டுப்போன, திசை மாறிப்போன மனிதர்களின் பேச்சிலிருந்தே அவர்களின் வழிகேடு அம்பலமாகிவிடும்.

பேச்சு என்பது ஒருவர் மொழிகின்ற சொற்கள் மட்டும் கிடையாது. அவற்றை அவர் எப்படி உச்சரிக்கின்றார் என்பதும் அவர் பேசு கின்ற தொனியும் அவர் எப்படிப்பட்டவர் என்பதை வெளிப்படுத்திவிடும்.

நிம்மதியின்றி, மன நிறைவின்றி மனிதர் பதற்றத்தில் இருக்கின்றார் எனில் அதுவும் அவருடைய பேச்சில் வெளியாகிவிடும். நிம்மதியாக வாழ்கின்றவரின் பேச்சிலோ இம்மியளவு பதற்றமும் எட்டிக்கூடப் பார்க் காது. நிம்மதியில்லாத, கவலையிலும் வேத னையிலும் சிக்கியிருப்பவரோ தம்முடைய பேச்சால் மற்றவர்களையும் கவலையில் ஆழ்த்தி விடுவார்.

இதற்கு நேர்மாறாக எவருக்கு திருப்தி யடைந்த ஆன்மா வாய்த்திருக்கின்றதோ அவருடைய பேச்சிலும் சொற்களிலும் எத்த கைய அசாத்திய சக்தி இருக்கும் எனில் அவ ருடைய பேச்சு தீராத கவலையில் தத்தளிப் பவரின் பதற்றத்தையும் தணித்து விடும்.

மனிதனின் ஆசைகளும் விருப்பங்களும் அவனுடைய பேச்சிலிருந்தே வெளிப்படும். மனிதன் ஆசைகளைச் சார்ந்தே வாழ்கின்றான். இன்னும் சொல்லப் போனால் மனிதனின் உண்மையான அடையாளம் அவனுடைய ஆசைகள்தாம். அவனுடைய ஆசைகளை வைத்துத்தான் அவன் மகத்தான இலட்சியங் களைக் கொண்டிருக்கின்ற மாமனிதனா, இலட்சியப் புருஷரா அல்லது சின்னச் சின்ன ஆசைகளைக் கொண்ட சாமான்யனா அல்லது அவற்றில் சிக்கிக் கிடக்கின்ற அற்பரா என்ப தெல்லாம் தெரிந்துவிடும்.

சிந்தனையிலும் எண்ணத்திலும் ஒருவர் உயர்ந்தோங்கி இருப்பாரேயானால், எல்லா வகையான குறுகிய பார்வைகளிலிருந்தும் எண்ணங்களிலிருந்தும் அவர் விலகி இருப் பாரேயானால் அவருடைய பேச்சிலும் அந்த பரந்த உள்ளமும் பார்வையும் வெளிப்படும். ஒருவருடைய பேச்சில் பாராட்டத்தக்க பண்புகள் பளீரென மின்னுகின்ற போதும், தவறான சிந்தனையாலோ, மட்டரகமான உணர்வாலோ இம்மியளவுகூட மாசுபடாத தாய் அவருடைய பேச்சு தனித்து நிற்கின்ற போதும் உங்களால் மிக எளிதாக ஒரே வார்த் தையில் அவருடைய ஆளுமையை விவரித்து விட முடியும்.

ஒருவருடைய சிந்தனை, செயல், உணர்வு ஆகிய அனைத்தும் எந்த வார்த்தையை அல்லது கூற்றை உறுதிப்படுத்துவதாய் இருக் கின்றதோ அது தூய்மையானதாயும், மகத் தானதாயும் இருக்கலாம்; அற்பமானதாயும் கேவலமானதாயும் இருக்கலாம். அந்த

மனிதரின் நடத்தையே அந்த வார்த்தையின் தரத்தை வெளிப் படுத்தி விடும்.

குர்ஆனில் இந்த இரண்டு வகையான வார்த்தைகள், கூற்றுகள் குறித்தும் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. தூய்மையான வார்த்தை, மகத்தான கூற்று முழுக்க முழுக்க நன்மையை மட்டுமே அளிக்கக்கூடியது; நீடித்த, நிலையான பலனை இடைவிடாமல் தரக்கூடியது; எல்லாவிதமான நன்மைகளுக் கும் மூல ஊற்றாக ஆகி விடக் கூடியது. அது எந்த ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை மட் டுமே சேர்ந்ததாகவோ, குறிப் பிட்ட நாட்டுடன் மட்டுமே தொடர்புடையதாகவோ இருப்ப தில்லை.

அது வானளாவிய அளவில் ஓங்கி, அடர்த்தியாக கிளை பரப்பி ஓங்கி நிற்கின்ற, எந் நேரமும் செழிப்பாக இருக் கின்ற மரத்தைப் போன்றதா கும். அதன் கனிகள் இனிமை யானவை. உடல் நலத்தையும் வலுவையும் தருபவை. மேலும் இப்படிப்பட்ட வார்த்தைகள் எந்நேரமும் உயிர்த்துடிப்போடு இருக்கின்றன.

அதனால் உள்ளமும் உட லும் புத்துணர்வு பெறுகின் றன. அதனையும் தாண்டி அது மக்களைத் தம் பக்கம் சுண்டி இழுக்கின்ற திறன் கொண்டது. அந்த வார்த்தை மனங்களையும் இதயங்களையும் சிலிர்த்தெழச் செய்யக்கூடியது. அதனையும் தாண்டி ஆன்மாவையே தட்டி எழுப்பிவிடக் கூடிய ஆற்றல் படைத்தது. அந்த வார்த்தையை மொழிந்தவர் மனித வாழ்வின்

• • •

பேச்சில் உண்மை இருத்தல் வேண்டும். உண்மையை மட்டுமே பேச வேண்டும். சொல்லில் உண்மை இல்லையெனில் அதனை ஒருபோதும் நாவில் கொண்டு வரவே கூடாது. பேச்சு தொடர்பான முதல் விதி இது தான்.

நம்முடைய பேச்சில் உண்மை இருப்பதோடு அதனையும் தாண்டி அது நன்மை தரக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

• • •

உண்மையை உணர்ந்துகொள் கின்றார். நடைமுறை வாழ் விலும் அது ஆழமாக, அழுத் தமாக தாக்கத்தை ஏற்படுத்து கின்றது. (பார்க்க: திருக்குர்ஆன் 14:24)

உரையாடுகின்ற போதும் பேசும் போதும் பின்வரும் மூன்று அம்சங்களை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லா இடங் களிலும் மனதில் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

1) உண்மை (Truthfulness)
2) நன்மை (Goodness)
3) பொருத்தம் (Appropriate)

1. உண்மை (Truthfulness)

நீங்கள் எதைப் பேசினா லும் அது உண்மையாகவே இருக்க வேண்டும். உங்களின் நாவிலிருந்து உண்மை இல் லாத, பொய்யான விஷயம் எதுவுமே ஒருபோதும் வெளி வரக் கூடாது. ஏனெனில் பொய்யும் அதன் கலப்பும்தாம் வழிகேட்டுக்கு அடிப்படைக் காரணங்களாய் இருக்கின்றன.

பண்டைய காலத்து தொன் மையான கதைகளையும் காப் பியங்களையும் எழுதியவர்கள் இந்த விஷயத்தைப் பேணி நடந்து கொள்ளவில்லை. அவர்கள் தேவிகள், தெய் வங்கள், சான்றோர்கள், பெரி யோர்கள் போன்றோரைப் பற்றிய கதைகளைப் புனைந்து எழுதிக் கொண்டே சென்று விட் டார்கள். மேலும் அவற்றை அவர்கள் உண்மையில் நடந்த நிகழ்வுகளாக, உண்மைகளாக சாமான்யர்களுக்கு முன்னால் எடுத்துரைத்தார்கள். அவற்றைக் கேட்ட, வாசித்த பக்தர்கள்

அவற்றை உண்மை நிகழ்வுகளாய்ப் புரிந்து கொண்டு கற்றும் கற்பித்தும் வந்தார்கள். அவற்றில் தங்களால் புரிந்துகொள்ள இயலாதவற்றை அவர்கள் தங்களின் அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயங்களாய் நினைத்துக் கொண்டார்கள். மேலும் மதக் கிரந்தங்களில் இருக்கின்ற அனைத்துமே முழுக்க முழுக்க உண்மைகள் தாம் என்று நினைத்துக்கொண்டார்கள்.

உண்மையின் முக்கியத்துவத்தையும் மகத்துவத்தையும் அவர்கள் அறிந்திருப்பார்களேயானால் அறிவார்ந்த அணுகுமுறையோடு அவற்றை அணுகி இருந்திருப்பார்களேயானால் உண்மைக்கும் பொய்க்கும் இடையிலான வேறுபாடு அவர்களுக்குப் புலப்பட்டிருக்கும். எது சத்தியம், எது அசத்தியம் என எளிதாக அடையாளம் கண்டிருப்பார்கள். ஆனால் உண்மையைக் காட்டிலும் அவர்களுக்கு விந்தையான, திடீர் திருப்பங்கள் நிறைந்த சுவையான கதைகள் தாம் பிடித்தமானவையாய் இருந்தன. அவர்கள் உண்மையை விட்டு வெகு தொலைவு விலகிச் சென்றுவிட்டார்கள். அறிவியல் ரீதியான மனோபாவம் அவர்களுக்குப் பிடிபடாமலே போயிற்று.

பேச்சில் உண்மை இருத்தல் வேண்டும். உண்மையை மட்டுமே பேச வேண்டும். சொல்லில் உண்மை இல்லையெனில் அதனை ஒருபோதும் நாவில் கொண்டு வரவே கூடாது. பேச்சு தொடர்பான முதல் விதி இதுதான்.

2. நன்மை (Goodness)

பேச்சு, உரையாடல் தொடர்பாக நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டாவது விஷயம் நன்மையாகும். நம்முடைய பேச்சில் உண்மை இருப்பதோடு அதனையும் தாண்டி அது நன்மை தரக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அதாவது உண்மையோடு நன்மையும் இருக்க வேண்டும். நீங்கள் சொல்வதில் எந்தவொரு நன்மையான விஷயமோ, பயனுள்ள அம்சமோ எதுவுமே இல்லையெனில் அதனை மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம்தான் என்ன?

இந்த இரண்டாவது விதியைக் கடைப்பிடித்தாலே எத்தனையோ பயனற்ற அரட்டைகளிலிருந்தும் பேச்சுகளிலிருந்தும் நாம் விடுதலை பெற்றுவிட முடியும். இவ்வாறு பயனற்ற பேச்சுகளைத் தவிர்ப்பதால் நாம் சேமிக்கின்ற நேரத்தை நல்ல நல்ல விஷயங்களைக் கற்றுக் கொள்வதிலும் அவற்றை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதிலும் பயன்படுத்தலாம்.

3. பொருத்தம் (Appropriate)

பேச்சு தொடர்பான மூன்றாவது விதியும் முக்கியமானது. அது குறித்தும் நாம் அனைவரும் அதிகக் கவனம் செலுத்துவது அவசியமாகும். நீங்கள் சொல்லப் போவது எத்துணை பெரும் உண்மையாகவே இருந்தாலும், பொருத்தமான நேரத்தையும் பொருத்தமான இடத்தையும் கருத்தில் கொண்டு இடமும் சூழலும் நேரமும் பொருந்திப் போகின்ற போது அதனைச் சொல்ல வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

நீங்கள் ஒரு நல்ல, நன்மையான, பயனுள்ள செய்தியையே சொல்வதாக இருந்தாலும் பொருத்தமற்ற நேரத்தில் பொருத்தமற்ற இடத்தில் அதனைச் சொல்லும்போது அந்த நல்ல செய்தியே இழப்பையும் பின்னடைவையும் ஏற்படுத்திவிடும். அறிவாளிகள் உங்களைக் குறித்து ‘விவரம் போதாத மனிதர்’ என்கிற தீர்மானத்திற்கு வந்து விடு வார்கள்.

எடுத்துக்காட்டாக ஓரிடத்தில் மகிழ்ச்சியும் குதூகலமும் நிறைந்திருக்கின்ற திருமண நிகழ்வு நடந்துகொண்டிருக்கின்ற போது அங்கு எல்லோரையும் துக்கத்திலும் சோகத்திலும் ஆழ்த்திவிடக் கூடிய செய்தியைச் சொல்வதற்கு அவசரப்படக் கூடாது. அந்தச் செய்தியை அங்கிருக்கின்ற மக்களிடம் பகிர்ந்து கொள்வதில் அவசரப்படக் கூடாது. அதற்கு மாறாக வேறு ஏதேனுமொரு நேரத்தில் அதனைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று தள்ளிப்போட்டு விட வேண்டும். இதே போன்று சோகமான சபைகளில், நினைவேந்தல் நிகழ்வுகளில் நின்று கொண்டு ஜோக் அடிப்பதும் சிரித்துப் பேசுவதும் சிரிக்க வைப்பதும் கூடாது.

நூல்: இஸ்லாமிய இயக்கம் அமைப்பு - தன்மை

ஆசிரியர்: K. ஜலாலுத்தீன்

வெளியீடு: இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்(IFT)
138, பெரம்பூர் நெடுஞ்சாலை,
சென்னை - 600012.
அலைப்பேசி: 8668057596

பக்கங்கள்: 60 **விலை:** ரூ. 75

இஸ்லாமிய இயக்கம்
அமைப்பு - தன்மை

இந்நூல் வெறுமனே ஓர் அமைப்பின் கட்டமைப்பைப் பற்றிப் பேசுகின்ற நூலன்று. இஸ்லாமிய இயக்கம் என்றால் என்ன? அதன் அடிப்படை நோக்கம் யாது? அதில் இணைந்துள்ளோரின் பண்புகள் எத்தகையனவாக இருக்க வேண்டும்? தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் அது எத்தகைய மாற்றங்களை உருவாக்க வேண்டும்? என்பவற்றை ஆழமாக எடுத்துரைக்கும் நூலாகும்.

இந்நூல் இரண்டு பெரும் பகுதிகளாக விளக்கப்பட்டுள்ளது. ஒன்று இஸ்லாமிய இயக்கத்தின் அமைப்பும் அதன் நோக்கமும். இரண்டாவது இஸ்லாமிய இயக்கத்தின் தன்மையும், அதனைத் தாங்கி நிற்க வேண்டிய பண்புகளும். இஸ்லாமிய இயக்கத்தின் மூன்று அடிப்படைப் பணிகளாக தனிமனித சீர்திருத்தம், சமூகக் கட்டமைப்பு, அரசியல் மறுசீரமைப்பு என மூன்று தளங்களில் தனி மனித முன்னேற்றம் அடையும் வழிகளை ஆசிரியர் விளக்குகிறார். இஸ்லாமிய இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவன் ஒரு பயிற்சியாளனாக, அழைப்பாளனாக, வழி காட்டியாக இருக்க வேண்டும் என்பதைத் திருக்குர்ஆன், நபிமொழி மூலம் விளக்கியுள்ள விதம் சிறப்பு.

இஸ்லாமிய இயக்கத்தின் கட்டமைப்பு என்பது மிக அவசியம். அந்தக் கட்டமைப்பு எவ்வாறு நபிகளாரின் வழிமுறைப்படி இருக்க வேண்டும். ஓர் அமைப்பிற்கு கலந்தாலோசனையின் அவசியத்தையும் ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார். இஸ்லாமிய இயக்கத்தின் தன்மைகள், அதன் இலக்கு, அதனை அடைய வேண்டிய அடிப்படைக் கூறுகளை அழகான முறையில் இந்த நூல் எடுத்தியம்புகிறது.

நாமும் சீர்திருந்த வேண்டும், சமூகமும் சீர்திருத்தப்பட வேண்டும் என்பதில் தான் இயக்கத்தின் உண்மையான தன்மை அமைந்திருக்கிறது. நபி(ஸல்), நபித்தோழர்களின் வாழ்வு தரும் படிப்பினைகளையும் நிகழ்வுகளையும் - இனவாதத்திலிருந்து எச்சரிக்கை, உலகளாவிய அழைப்பு, இஸ்லாமிய இயக்கத்தின் பரந்த பார்வை, உலக சகோதரத்துவத்தின் தாக்கம், இயக்க மனப்பான்மையின் தாக்கம், அழைப்புப் பணியின் பொறுப்பு, அழைப்பு அனைவருக்குமானது, இயக்கத்தின் உயிர்த்துடிப்பு, கூட்டு மனப்பான்மை, வெற்றி தோல்விகளின் இயல்பு, தமிழ் நாட்டின் சமூகச் சூழல், குர்ஆனுடனான ஆழமான தொடர்பு, இயக்கத் தன்மையைப் பாதிக்கும் அம்சங்கள் போன்ற பல தலைப்புகளின் கீழ் ஓர் இறைநம்பிக்கையாளன் வாழும் வாழ்க்கை வழிமுறையை ஆசிரியர் K. ஜலாலுத்தீன் அவர்கள் திறம்பட விளக்குகிறார். இந்நூலை இஸ்லாமிய நிறுவனம் அறக்கட்டளை (IFT) மிகச் சிறப்பாக வெளியிட்டுள்ளது.

‘இஸ்லாத்தில் முழுமையாக நுழைந்து விடுங்கள்’ என்ற இறைக் கட்டளைக்கேற்ப இஸ்லாமிய இயக்கத்துடன் சேர்ந்து பயணிப்போம். இஸ்லாமிய இயக்கவாதிகள் மட்டுமல்ல அனைவரும் அவசியம் வாசித்துப் பின்பற்ற வேண்டிய நூல்

- அ. ஃபாத்திமா ஜலால்

• ஜரினா ஜமால்

அக்கரைப் பச்சை 47

எந்த அளவுக்கு சல்மான் அவளை நேசித்தான் என்பது அவர்கள் குடும்பத்தினருக்குத் தான் தெரியும். கோபக்கார கணவனாக இருந்தாலும் ஆமினாவும் கணவனை இழந்து தானே கரைந்து கொண்டுள்ளாள். சாலிஹாவின் விம்மும் முதுகை ஆதரவாகத் தடவிக் கொடுத்தாள் ஆமினாக்கா. விசில் ஊதப் பட்டது. எல்லோரும் அவசரமாக ரயிலை விட்டுக் கீழே இறங்கினார்கள்.

கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் நடுக்காட்டில் சிக்னலுக்காக எதிரில் வண்டி கிராஸ் ஆகும் வரை மணிக்கணக்காக நிற்பான். வண்டியில் இருப்பவர்கள் வேர்த்து குளித்து விடுவார்கள். எப்போடா வண்டியை இழுப்பான் என்று இருட்டை விரித்துப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதே வண்டி மதுரை திண்டுக்கல் திருச்சி என்று நின்றால் 5 நிமிடம் காப்பி வாங்கிக் குடிக்க முடியாது வேகமாக இழுத்து விடுவான்.

திரையை இழுத்து விட்டு வசதியாகத் தன் பெர்த்தில் அமர்ந்து மடியில் முகம் புதைத்து அழுதாள் சாலிஹா. எதற்கு அழுகிறாள் என்று தனக்கே தெரியாமல் அழுதாள். வரும்போது வந்த தைரியம் போகும் போது குறைந்ததா என்று தெரியாமல் அழுதாள்.

குடும்பத்தினரைப் பார்க்கப் போகிறோம் என்ற பரபரப்பில் தைரியமாக வந்தாள். அழுகையினூடே சல்மானின் முகமும், இறுதியாக அவன் சொன்ன வார்த்தைகளும் மனதில் வந்தது.

'என் கண்ணே சாலிஹா! நான் இருக்கும்போது நீ தைரியமாக இருப்பதை விட, நான் இறந்த பிறகு உன் தைரியம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். மறுமணம் பற்றி உன் குடும்பத்தினர் பேசினால் உனக்குக் கோபம் வரக்கூடாது. நான் இருப்பது போலவே நினைத்து தைரியமாக வாழக் கற்றுக்கொள்' என்றான்.

கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தாள். ஆமினா அக்காவிடம் சல்மானைத் தேடுவதாகச் சொன்னதை நினைத்து வெட்கினாள். ஏன் என் மனம் இப்படி ஆகிவிட்டது? எதற்காக அப்படிப் பேசினேன்? என்று தன்னையே கேட்டுக் கொண்டாள். குடும்பத்தில் அனைவரும் இருக்க தன் உள்ளம் நிரம்பியவன் அங்கில்லாததால் தான் தேடி

னேன் என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டாள்.

ஒருமுறை சல்மான் தன் பெயரைக் கூறி அழைக்குமாறு அவளிடம் கெஞ்சினான்.

‘உங்க வயசு என்ன என் வயசு என்ன? பெரியவங்களைப் பெயர் சொல்லி கூப்பிடக்கூடாது’

‘நான் என்ன கிழவனா? பெரியவன் என்று கூறி தட்டிக் கழிக்கிறாய். கணவனை பேர் சொல்லிக் கூப்பிடலாம்.. சல்மான்னு சொல்லு’

இறுதிவரை அழிச்சாட்டியம் பண்ணி பேர் சொல்ல மறுத்து விட்டாள்.

நான் அவருடைய ஆசையை நிறை வேற்றவில்லையோ? இதுபோல் என் னென்ன ஆசைகளை நிறைவேற்றாமல் இருந்தேன். இப்போது நினைத்து என்ன பயன்?

மணி பன்னிரெண்டு ஆகியும் தூக்கம் வர மறுத்தது. மதுரைக்கு வரும்போது விழுப்புரத்தில் சரோஜமா கட்டிக் கொடுத்த இட்லியைச் சாப்பிட்டு உடனே தூக்கத்தை அணைத்தாள். இப்போது திருச்சி வந்தும் கூட தூக்கம் வர மறுத்தது. இதமான ஏசி இருந்தும் கூட புரண்டு புரண்டு படுத்தாள். எப்போது தூங்கினாள் என்றே தெரியாது.

நோக்கியா அலறியபோது திடுக்கிட்டு எழுந்தாள். அந்தப் பக்கம் யாரோ பேசி னார்கள். எங்கேமா இருக்கீங்க? தாம்பரத் தில் காத்திருக்கிறோம். இறங்கி விடுங்கள். அவசரமாய் எழுந்து நேரம் பார்த்தாள். 3 மணிக்கு மேல் காட்டியது. தன்னை சுத்தப் படுத்திக் கொண்டு பெட்டிகள், சாமான்கள், எல்லாவற்றையும் ரயிலின் வாசல் பக்கத் தில் கொண்டு வைத்தாள்.

நான்கு மணிக்கு மேல் தாம்பரத்தில் வண்டி நின்றது. பெட்டிக்கு எதிரே ஒரு பெண்மணியும் முபீனும் நின்றிருந்தார்கள். ஓடி வந்து சாலிஹாவின் கையை இறுக்கப் பிடித்து விட்டு ஒவ்வொரு பொருளையும் கீழே இறக்கினாள். பொருள்களை ஓரமாக வைத்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் முன் முபீன் சாலிஹாவை இறுக்கமாகக் கட்டிக்கொண்டாள்.

‘ஆன்ட்டி உங்களை நான் ரொம்ப மிஸ் பண்ணினேன்’

‘மூச்சு விட முடியவில்லை விடுடி’ என்று சொல்ல, வந்திருந்த இரண்டு பெண் களுக்கும் சலாம் கூறினாள். டிரைவரும், அவருடன் இன்னொரு ஆணும் வந்து சாமான்களைத் தூக்கிப் போனார்கள். கூட்டம் குறைந்தது. சாலிஹாவுடன் அமர்ந்து தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு பயணம் குறித்து விசாரித்தார்கள்.

மீண்டும் டிரைவர் வந்து, ‘வாங்கம்மா வாங்க போகலாம்’ என்றார்.

முபீன் ஒட்டுப்புல் போல சாலிஹாவை ஒட்டிக்கொண்டு அமர்ந்தாள்.

‘ஆன்ட்டி போகும்போது ஃபேமிலிக்கு நிறைய வாங்கிப்போனீங்க. இப்போ அதை விட அதிகமா கொண்டு வந்து இருக்கீங்க.’

‘ஏன்டி நீ என் ஃபேமிலி இல்லையா?’

‘இப்பதான் ஆன்ட்டி நீங்க வெளி நாட்டுல இருந்து வந்தது போல இருக்கு’

‘சரி சரி ரொம்ப வாராத, வழியாத..!’

‘இந்த இரண்டு மாசத்துல ஒரு சுத்து பெருத்துட்டடி’

‘நீங்க ரொம்ப வீணாயிட்டீங்க ஆன்ட்டி!’

‘எல்லாம் உன்னைத் தேடித்தான்’

‘இப்ப நீங்க என்ன மாறிட்டீங்க .போன் போட்டா வைடி வைடின்னு ஒரே கட் பண்றது. இதுல தேடுனதா பொய்யி..!’

‘ஏண்டி போகும் போது எல்லா மேட மும் வந்தாங்க. இப்ப புதுசா ரெண்டு பேர் வந்து இருக்காங்க’

‘ஆன்ட்டி ஹோம்ல வந்து பாருங்க.. சர்ப்ரைஸ். மால, கொட்டு,மோளமெல்லாம் இருக்கு. நா ஒன்னும் சொல்ல மாட்டேன்’

‘நா வரமாட்டேன்னு சொன்னதுக்கு சைதா மேடம் திட்டப் போறாங்களா?’

‘உங்கள இனிமே திட்டக்கூடாதுன்னு ஆர்டர். நா தான் போட்டேன் ஆன்ட்டி.

இரண்டு நாளாக பிள்ளைகளெல்லாம் வந்துட்டாங்க. மேடங்களும் பாதிப்பேர் மேலே தங்கியிருக்காங்க. புதுப் பிள்ளைகளெல்லாம் பாதிப்பேர் சித்திஷராயில் தங்கியிருக்காங்க அவங்க அம்மாவோடு. இப்ப காலையில மத்த மேடங்களும் வந்துடுவாங்க'

'தொண, தொணன்னு பேசாத! சர்ப்ரைஸ் என்னன்னு சொல்லு. பயமா இருக்கு'

'அந்த பயம் இருக்கட்டும்'

'என்னடி மெரட்டுறே!'

வண்டலூர் தாண்டி கூடுவாஞ்சேரி விட்டு மேடவாக்கம் தார் ரோட்டில் விரைந்தது கார். இருள் விலகி மெல்லிய வெளிச்சம் உலகை எட்டிப் பார்க்கவா என்றது. புள்ளினங்களும் பறவைகளும் சிறகடித்துப் பறந்தன. விதவிதமான பறவைகளின் குரல்கள். புதிய உலகத்திற்கு வந்தது போல் இருந்தது.

ஹோமின் இரண்டு கேட்டுகளும் அகலத் திறந்து இருக்க, கார் ஹோமுக்குள் நுழைந்து உள் வாசல் கேட் அருகில் நின்றது. வாசலில் நின்ற மரங்களில் திடீரென்று விளக்குகள் எரிந்தது. உள்ளம் திக் திக் என்று அடித்துக் கொண்டது மெதுவாக காரை விட்டு இறங்கினாள். வரிசையாக டிரஸ்டி மேடங்கள் வெளியில் வந்தார்கள்.

'வெல்கம் சாலிஹா. அஸ்ஸலாமு அலைக்கும்' என்ற குரல்கள் தொடர்ந்தது.

பதில் சொல்லிவிட்டு உள்ளே போக யோசிக்கும் போதே முபீன் கிசுகிசுத்தாள்.

'ஆன்ட்டி நான் எல்லாத்தையும் தூக்கிட்டு வரேன். வலது காலை எடுத்து வைத்து உள்ளே போங்க.!'

அவளை முறைத்த போது, 'வாங்க சாலிஹா..' என்று சைதா மேடத்தின் குரல் ஒலித்தது.

சாலிஹா ஹோமிற்குள் நுழையவும் மேலிருந்து 'டப்' என்ற சத்தத்துடன் தலை முதல் பர்தா முழுவதும் கலர் கலரான பூக்கள் சொறிந்தது.

'இதெல்லாம் எதற்கு?' என்று முணங்கினாள்.

'இதெல்லாம் நான் உங்களுக்காகக் கொடைக்கானலில் இருந்து என் கார்டனில் பறித்து வந்தேன் சாலிஹா' என்றாள் சைதா மேடம்.

உள்ளே நுழைந்ததும் பிள்ளைகள் கோரசாக 'குட்மார்னிங்' என்றார்கள். சலாம் சொன்னார்கள். பழைய பிள்ளைகள் ஓடி வந்து 'அம்மி ஜான்' என்று கட்டிக் கொண்டார்கள்.

சாலிஹாவின் நெஞ்சம் உருகி கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. பிள்ளைகளைக் கட்டிக் கொண்டாள். ஒவ்வொரு பிள்ளையின் முகத்திலும் சல்மான் தெரிந்தான்.

முபீன் கிசுகிசுத்தாள். 'நான் கட்டிப் புடிச்சா இன்சல்ட் பண்றீங்க.. இப்ப எல்லா பிள்ளைகளும் கட்டிப் பிடிக்கிறாங்க. இப்போ கேக் வெட்டப் போறீங்க. முதல் பீஸை எனக்குத் தருவீங்களா? சைதா மேடத்துக்கு ஊட்டுவீங்களா?'

அப்போதுதான் கவனித்தாள். ஹாலின் நடுவே மிகப்பெரிய கேக் உட்கார்ந்திருந்தது.

சைதா மேடம் சொன்னாள், 'அல்லாமா இக்பாலின் கவிதையைப் பாடுங்கள்'

**'லெப்ப ஆத்தி ஹே துஆ பன்க்கே
தமன்னா மேரி..
மேரே அல்லாஹ்..
புராய்ஸே பச்சானா முஜ்கோ
நேக் ஜோ ராஹ்ஹோ உஸ்
ரஹ் பே சலானா முஜ்கோ.'**

(என் இறைவா! என்னை தீமைகளில் இருந்து பாதுகாப்பாயாக! எது நேர்மையான நல்ல வழியோ அந்த வழியில் என்னை நடத்துவாயாக)

சாலிஹாவும் வாசித்தாள் பிள்ளைகளுடன். சைதா மேடமும் பாடியது வியப்பாக இருந்தது. பிச்சைக்காரப் பாடலை பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கிறாயா என்று கேட்டது நினைவிற்கு வந்தது.

கல்லையும் கரைத்துவிட்ட சாலிஹாவின் பயணம் தொடர்ந்தது. - முற்றும்

சமரசம் புதிர் போட்டி 21

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 நவம்பர் 15ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகிய வற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகிய வற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. ‘மனிதர்களே! அல்லாஹ் உங்கள் மீது பொழிந்துள்ள அருட்பேறுகளை நினைவில் வையுங்கள். வானம் மற்றும் பூமியிலிருந்து உங்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கின்ற படைப்பாளன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இருக்கின்றாரா? வணக்கத்திற்குரி யவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. பிறகு எங்கிருந்து நீங்கள் ஏமாற்றப்படுகின் றீர்கள்?’ – இந்த வசனம் இடம்பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) ஃபாத்திர் ஆ) ஸபா

2. ‘தான் கேள்விப்பட்டதையெல்லாம் மக்களிடம் பரப்பித் திரிவதே ஒருவன் பொய்யன் என்பதற் கான அடையாளம்’ என்ற நபிமொழியை அறிவித்தவர்

   அ) அபூஹுரைரா(ரலி)
   ஆ) இப்னு அப்பாஸ்(ரலி)

3. ஐரோப்பிய நாடுகளிலுள்ள தங்கத்தைச் சேக ரித்து வைத்துள்ள அமெரிக்க வங்கி

   அ) De Nederlandsche Bank(DNB)
   ஆ) Federal Reserve

4. கோயிலின் புனிதத்தைக் காக்கவே காசி விசுவ நாதர் ஆலயத்தை ஔரங்கஜேப் இடித்தார். அவர் மத வெறியால் கோயிலை இடிக்க வில்லை என்ற வரலாற்று உண்மையை இஸ்லாமும் இந்தியக் கலாச்சாரமும் நூலில் எழுதிய வரலாற்று ஆசிரியர்

   அ) சி.என்.பாண்டே ஆ) ஜாதுநாத் சர்க்கார்

5. இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக 14 ஆட்சேபணைகளைத் தெரிவித்த மற்ற இரு தேர்தல் ஆணையர்கள்

   அ) விவேக் ஜோஷி, அர்ச்சனா பட் நாயக்
   ஆ) சுக்பீர் சிங் சந்து, விவேக் ஜோஷி

6. அக்டோபர் மாதத்தின் இறுதி வாரத்தை (24-31) யுனெஸ்கோ அமைப்பு என்ன வார மாகக் கடைப்பிடிக்கின்றது?

   அ) உலக ஆடியோ விஷுவல் வாரம்
   ஆ) உலக ஊடக தகவல் எழுத்தறிவு வாரம்

7. ஏடனிலுள்ள முக்கியமான விமான நிலையம்

   அ) சலாலா சர்வதேச விமான நிலையம்
   ஆ) சன்ஆ விமான நிலையம்

8. 2026ஆம் ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்

   அ) நவநீதம் நவி பிள்ளை
   ஆ) கைலாஷ் சத்யார்த்தி

புதிர் போட்டி பத்தொன்பதுக்கான விடைகள்

1. அ)அல் அஹ்ஜாப 2. அ)அபூ உமாமா(ரலி) 3. ஆ)அன்னை உம்மு ஸலமா(ரலி) 4. ஆ) ஜார்ஜ் பெர்னாட்ஷா 5. ஆ) லா நினா 6. ஆ) ஜவஹர்லால் நேரு 7. ஆ) Zinger Officinali 8. அ) கார்த்தி சிதம்பரம்

சரியான விடையை எழுதியவர்கள்:

1. பரீதா சேகு முஹையதீன், சென்னை 2. சையத் ஜுபைர், தர்மபுரி 3. ந.அனிபா, நாமக்கல் 4. G.அன்பழகன், ஆற்காடு 5. முஹம்மத் உவைஸ், ஏர்வாடி 6. ஷிஃபா, ஏரல் 7. A. சேட்டு முஹம்மது, இனாம்குளத்தூர் 8. P.P. யூசுஃப்ஹஸன், கடைய நல்லூர் 9. பிர்தௌஸ், திருநெல்வேலி 10. H. ஷாகுல், கொரக்கவாடி 11. நபிசா, சென்னை 12. பர்சானா பர்வீன், ஆழ்வார் திருநகரி 13. அஜீம், காரைக்கால் 14. தௌஸ் மீரான் அப்துல் கரீம், திருநெல்வேலி 15. ஸ்ரீமதி, மஞ்சக் குப்பம் 16. T.A. அயானா, கடையநல்லூர் 17. மு. இஸ்ரத் ரைஹானா, குளச்சல் 18. B. சுஹைனா தஸ்லீம், கிள்ளை 19. ராபியா, துவரங்குறிச்சி 20. முஹம்மது சலீம், புதுச்சேரி 21. R. கார்த்தி, ஆக்கூர் 22. சோழா புகழேந்தி, கரிய மாணிக்கம் 23. R. பாலசுப்பிரமணி, ஆக்கூர் 24. A. மகுதா பீவி, திருநறையூர்

பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:

ராபியா, துவரங்குறிச்சி

எல்லாப் புகழும் இறைவனுக்கே!

- கே.பி. பத்மநாபன்

எல்லாப் புகழும் இறைவனுக்கே
என்றே இங்கே வாழ்வோர்க்கு
அல்லா கருணை காட்டிடுவான்
அன்பால் அருளால் அணைத்திடுவான்
இல்லா தோர்க்குச் செல்வத்தை
ஈந்தே அவரை வாழ்விப்பான்
கல்லா தோர்க்கும் கருணையினைக்
காட்டி அவரை உயர்த்திடுவான்

சொல்லால் காயப் படுத்திட்டால்
சோற்றைப் பகிரா திருந்துவிட்டால்
செல்லாக் காசாய் இருந்திட்டால்
செருக்கும் கொண்டே வாழ்ந்திட்டால்
பொல்லாப் பெல்லாம் செய்திட்டால்
பொய்யும் புரட்டும் பேசிட்டால்
அல்லா அருளைப் பொழிவானா?
அன்பாய் மன்னித் திடுவானா?

நல்லா ஓதும் திருமறையை
முற்றாய்க் கற்றே உணர்ந்திங்கே
எல்லா நாளும் முறையாக
ஏத்தித் தொழுகை செய்திட்டால்
நல்லோ னாக வாழ்ந்திடலாம்
நபிகள் உரைத்த நல்வாக்கு
வல்லோ னான அல்லாவை
வணங்கி வாழ்தல்தான் இஸ்லாம்!

குட்டீஸ், இரண்டு படங்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்..!



வார்த்தை விளையாட்டு

சிதறிக் கிடக்கும் எழுத்துகளை ஒழுங்குபடுத்தி சரியான சொல்லைக் கண்டுபிடியுங்கள்.

அடுத்து வட்டத்துக்குள் இருக்கும் எழுத்து களைக் கொண்டு தமிழ்நாட்டு நகரங்களில் ஒன்றைக் கண்டுபிடியுங்கள்.

ண	தி	ம	ரு	ம்
				●

ரு	ம்	வ	உ
		●	

ச்	ர	ச	ச	வு
				●

ர்	தி	சி	ச்	அ
●				

விடை : அடுத்த இதழில்..

சித்திரம் பேசுது..!

மு.ஹூதைஃபா, 5ஆம் வகுப்பு,
ஸ்ரீ விகாஷா பப்ளிக் பள்ளி,
சின்னமனூர், தேனி

S. இர்ஃபா பாத்திமா, முதல் வகுப்பு,
கிரசண்ட் மெட்ரிக்குலேஷன்
மேல்நிலைப்பள்ளி, உத்தமபாளையம்

அன்புச் செல்லங்களே..! இது உங்கள் பக்கம். சிறுகதை, கவிதை, துணுக்கு, விடுகதை என நீங்கள் எதுவும் எழுதலாம்! இங்கு இடம்பெற்றுள்ள அழகிய வண்ண ஓவியங்களைப் போல நீங்களும் ஓவியங்கள் வரைந்து அனுப்பலாம். வாட்ஸ்அப்பில் அனுப்ப: **7305040386**

அனுப்ப வேண்டிய முகவரி : *சிறார் உலகம், சமரசம் மாதமிருமுறை இதழ்*
IFT லேன், 138 பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600012

உமர் காலிதுக்கு சர்வதேச அங்கீகாரம்

■ உமர் காலித்

அசாதாரணமான மனித உரிமைப் பணிகளை ஆற்றியதற்காக உலகம் முழுவதிலுமிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட ஐந்து மனித உரிமைப் பாதுகாவலர் களில் ஒருவராக இந்தியாவின் உமர் காலிதை அயர் லாந்திலுள்ள ஃப்ரண்ட் லைன் டிஃபெண்டர்ஸ் (Front Line Defenders) அமைப்பு கௌரவித்துள்ளது.

உமர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையிலும் மனித உரிமைகளுக்காக அவர் தொடர்ந்து மேற்கொண்டு வரும் அர்ப்பணிப்புக்கும் பணிகளுக்கும் கிடைத்துள்ள சர்வதேச அங்கீகாரமாக இந்த விருது அமைந்துள்ளது. நீதிக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்து வரும் சமூகச் செயற்பாட்டாளர் உமர் காலிதுக்கு மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான சர்வதேச விருது வழங்கப்படுவது அவரது அறப்போராட்டத்திற்கான உலகளாவிய அங்கீகாரம் ஆகும்.

■ விருதைப் பெற்றுக் கொள்ளும் உமர் காலிதின் தந்தை

ஆறு ஆண்டுகளாகச் சிறைவாசம் அனுபவித்து வரும் உமர் காலிதுக்கு வழங்கப்பட்ட இந்த அங்கீகாரம் சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. சிறைக் கம்பிகளால் சுதந்திரக் குரலை அடக்கிவிட முடியாது என்பதை இந்த விருது உலகிற்கு உரத்துச் சொல்கிறது.

அயர்லாந்தைச் சேர்ந்த Front Line Defenders அமைப்பு வழங்கும் Award for Human Rights Defenders at Risk என்ற இந்த விருது மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆபத்துகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளும் செயற்பாட்டாளர்களை அங்கீகரிக்கும் நோக்கில் வழங்கப் படுகிறது. இந்த விருது விழாவில் உமர் காலிதின் சார்பில் அவரது தந்தை வெல்ஃபேர் பார்ட்டி ஆப் இந்தியாவின் அகில இந்திய பொதுச் செயலாளர் டாக்டர் S.Q.R. இல்யாஸ் விருதைப் பெற்றுக்கொண்டார்.

உமர் காலிதின் இந்த சர்வதேச அங்கீகாரம் மனித உரிமைகள், கருத்துச் சுதந்திரம், நீதி, ஜனநாயகத்தின் மாண்புகள் குறித்த விவாதத்தை மீண்டும் எழுப்பியுள்ளது. உலகமே அங்கீகரித்த மனித உரிமைப் போராளியை அநீதியாக சிறையிலடைத்த பாஜக ஆட்சியாளர்கள் இனியும் தாமதிக்காமல் உமர் காலிதையும், அநியாயமான முறையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மாணவப் போராளிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

YOUR E-COMMERCE, OUR EXPERTISE

WE NOW ACCEPT TO PAY & COD BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"

SAFE & SECURE DELIVERY

FAST & RELIABLE

NATIONWIDE NETWORK

TRUSTED BY BUSINESSES

Priority

Follow Us On :

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 01 - 15 November 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

Anywhere - Anytime

- Domestic
- International
- Cargo

Send your documents & Parcels through

THE PROFESSIONAL COURIERS

Pro premium a professional service › DOMESTIC › INTERNATIONAL › CARGO

BUSINESS ENQUIRY :
No.32, Thiru-Vi-Ka Salai,
Royapettah, Chennai-600014.
Phone: 044-4555 3222
E-Mail: maaro-mkt@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com

SERVICE ENQUIRY :
No.17, Cathedral Garden Road,
Nungambakkam, Chennai-600034.
Phone: 044-6620 2020
E-Mail: maaro@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com

If undelivered, please return to : Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.